இளங்கோ வாசகம்

[முதற் புத்தகம் - முதற் படிவம்]

முதற் பிரிவு

பேராசிரியர் ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை
முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954, ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 11 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சாந்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

'இளங்கோ வாசகம்' என்னும் இந்நூல்வரிசை உரிமைபெற்ற நம் மாநில மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக்கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத்தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண் ப

I. கடவுள் வாழ்த்து ...

II. நீதிப் பகுதி

1. நல்வழி ...
2. நன்னெறி ...
3. திருக்குறள் ...

III. வரலாற்றுப் பகுதி

தேசிங்கு மன்னன் நவாபுக்கு ஓலை அனுப்புதல் ...

IV. கதைப் பகுதி

தகாத ஆசை ...

V. வருணனைப் பகுதி

ஆலமரம் ...

VI. பலவகைப் பாடல்கள் ...

உரைநடைப் பகுதி

1. அன்புநெறி காத்த அண்ணல் ...
2. மைனாவும் முயலும் ...
3. கோபாலனும் கிராமவாசியும் ...
4. கொலம்பஸ் ...
5. பாட்டுக்கொரு புலவன் ...
6. சிறிய உயிர்களின் அரிய செயல்கள் ...
7. கப்பல் ஓட்டிய தமிழன் ...
8. தம்பி செய்த தந்திரம் ...
9. காய்கறித் தோட்டம் அமைத்தல் ...
10. நான் சிறுவனாக இருந்தபோது ...
11. இளங்கோவடிகள் ...

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

— சேக்கிழார்

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பே,
காணார்க்கும் கண்டவர்க்கும்
கண்ணளிக்கும் கண்ணே,
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே,
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
மதிகொடுக்கும் மதியே,
நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நடுநின்ற நடுவே,
நரர்களுக்கும் சுரர்களுக்கும்
நலங்கொடுக்கும் நலமே,
எல்லார்க்கும் பொதுவில்நட
மிடுகின்ற சிவமே,
என்னரசே, யான்புகலும்
இசையுமணிந் தருளே! 2

— இராமலிங்க சுவாமிகள்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தங் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! 3

— தொண்டரடிப்பொடி ஆழ்வார்

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்,
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.

நாளும் நாடோறும்
வாடா மலர்கொண்டு
பாடீர் அவன்நாமம்
வீடே பெறலாமே. 5

— நம்மாழ்வார்

ஆதியாய் அநாதியாகி அரும்பொருள் அனைத்துமாகிச்
சோதியாய்ச் சொரூப ஞானச் சுடரொளித் தீபமாகி
நீதியாய்த் திறமை யாகி நித்தியா நந்த மாகி
மாதிரப் புயமு மான மகம்மதே! வருகுவீரே! 6

— மஸ்தான் சாகிப்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதஞ் சிந்தித் தேத்துவாம். 7

— கிருஷ்ணப் பிள்ளை

குறிப்புரை

1. சேக்கிழார் பெரிய புராணம் என்னும் ஓர் அரிய நூலை இயற்றியுள்ளார். இவர் குன்றத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர். நாயன்மார்களின் அரும்பெருஞ் செயல்கள் பெரிய புராணத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஓதற்கு—சொல்லுதற்கு, வேணியன்—சடையை உடையவன். அலகில்—அளவில்லாத. நிலவு—சந்திரன். நீர்—கங்கை. அம்பலம்—வெட்டவெளி, ஞானசபை.

சந்திரனும் கங்கையும் சிவபெருமானின் திருமுடியில் உள்ளன என்பது குறிப்பிடப்பட்டது.

2. இராமலிங்க சுவாமிகள் சீர்திருத்தப் பாடல்கள் பாடுவதில் முதன்மையானவர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடல்களின் தொகுப்புக்குத் திரு அருட்பா என்று பெயர்.

களிப்பு—இன்பம். மதி—அறிவு. நரர்—மனிதர். சுரர்—தேவர். பொதுவில்—ஞானசபையில். புகலும்—சொல்லும். இசை—புகழ். அணிந்தருள்—ஏற்றருள்க.

3. தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஒரு விஷ்ணு பக்தர். இவர் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர். இவர் பாடிய திருமாலை, திருபள்ளியெழுச்சி போன்ற பாக்களை நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் காணலாம்.

கமலம்—தாமரை. ஏறு—தலைவன். அச்சுதன்-அழிவே இல்லாதவன், திருமால். ஆயர்—இடையர்.

4. கழல் இணை—வீரக்கழல் அணிந்த இரு பாதங்கள். நண்ணும்—நெருங்கும். திண்ணம்—உறுதி.

5. வாடா—வாடாத. நாமம்—திருப்பெயர். வீடு—மோட்சம்.

6. மஸ்தான் சாகிப் ஒரு தமிழ்ப் புலவர், இது முகம்மதிய மதத்தை ஏற்படுத்திய நபிநாயகத்தின் மீது பாடப்பெற்ற பாடல் ஆகும்.

ஆதி—முதல். அநாதி—இறுதி. சொரூபம்—அழகு. ஞானம்—அறிவு. நித்தியம்—அழியாதது. புயம்—தோள்.

7. இது கிருஷ்ணப் பிள்ளை அவர்கள் இயற்றிய இரக்ஷணிய யாத்திரிகம் என்னும் நூலில் வரும் ஏசுநாதர் துதிப்பாடலாகும்.

நனி—மிக. ஊனம்—குறைவு. தீன ரட்சகன்—ஏழைகளைப் பாதுகாப்பவன், ஏசுநாதர். சித்தித்து—நினைந்து.

வினாக்கள்

1. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
2. இராமலிங்க சுவாமிகள் இறைவன் தன்மைகளைப் பற்றி என்னென்ன கூறுகின்றார்?
3. 'அச்சுவை பெறினும் வேண்டேன்'—என்று கூறுபவர் யார்? அவர் எச்சுவை வேண்டாமென்கிறார்? எச்சுவையை விரும்புகிறார்?
4. கண்ணனை எங்ஙனம் வழிபடுதல் வேண்டும்?
5. மகம்மது நபியின் அருள் திறத்தைப் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார்?
6. ஏசுநாதர் யார்? அவர் பெருமைகள் யாவை?

பயிற்சி

1. சிலம்படி, அணிந்தருள், நகருளானே, முடையீர்,—இவற்றைப் பதம் பிரித்துக் காட்டுக.
2. களிப்பு+அருளும், கண்+அளிக்கும், என்+அரசு, நாள்+தோறும்—இவற்றைச் சேர்த்து எழுதுக.
3. இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் உனக் மிகவும் விருப்பமானது எது? ஏன்? அதன் பொருளை உன நடைப்படுத்தி எழுதுக.
4. நலங் கொடுக்கும், வாழ்த்தி, உலாவிய, பவ வாய், நாடோறும்—இவற்றை உன் சொந்த வாக்கிய களில் பயன்படுத்தி எழுதுக.
5. 'கடவுள் வழிபாடு' என்னும் தலைப்பில் ஒரு சி கட்டுரை எழுதுக.

II. நீதிப் பகுதி

1. நல்வழி

பாவம் நீக்கிப் புண்ணியம் செய்க

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்
[ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

கொடுத்தோர் உயர்குலத்தினர் ; கொடாதவர் இழிகுலத்தினர்

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

இன்ப துன்பம் தாமே வருவன

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா :
பொருந்துவன போமினென்றால்போகா;—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 3

உயர்ந்தோர் பண்பு

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந்நாளும் அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 4

அழுவதால் பயனில்லை

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர்,—வேண்டா
நமக்கும் அது வழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

வயிற்றின் துன்பம்

ஒருநா ளுணவை யொழியென்றால் ஒழியாய்!
இருநாளைக் கேலென்றா லேலாய்!—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது.

உழவுத்தொழில் சிறந்தது

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

பெருமைக்குக் காரணம்

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.

சான்றோர் செல்வம்

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

நாம் நினைப்பதுபோல் நடப்பதில்லை

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும் ;
அன்றி யதுவரினும் வந்தெய்தும் ;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் ;
எனையாளு மீசன் செயல். 10

—ஔவையார்

குறிப்புரை

இது மக்கள் நடக்க வேண்டிய நல்ல வழிகளைக் கூறுவது. அதனால் இதற்கு நல்வழி என்று பெயர். இதன் ஆசிரியர் ஔவையார்.

1. ஆம்—ஆக்குதற்குரியது. போம்—போக்குதற்குரியது. எண்ணுங்கால்—ஆராய்ந்து பார்த்தால். சமயம்—மதம். ஈது ஒழிய—இதனைத் தவிர.

2. சாற்றுங்கால்—சொல்லும்போது. நெறி—வழி. இட்டார்—யாசித்தவருக்கு வழங்கியவர். பட்டாங்கில்—உண்மை நூலில்.

3. வாராத வருந்தி அழைத்தாலும் வாரா எனக் கூட்டுக. பொருந்துவன—ஊழ்வினையால் வந்துசேரக் கூடியவை. ஏங்கி—வருந்தி. நெடுந்தூரம்—நீண்டநாள் அல்லது நீண்ட நேரம். துஞ்சுவது—இறப்பது. இன்பம் வந்தால் அது கருதி நாம் மகிழவும் கூடாது; துன்பம் வந்தால் அது கருதி நாம் வருந்தவும் கூடாது.

4. பெருக்கு—வெள்ளம். அற்று—வற்றிப்போய். நல்கூர்ந்தார்—வறுமையுடையவர். ஏற்றவர்க்கு—யாசித்தவர்க்கு. இசைந்து—விரும்பி. இசைந்து இல்லை என மாட்டார் எனக் கூட்டுக.

5. மா—பெரிய. நமக்கும் அதுவழியே—நமக்கும் அம்மரணமே வழியாகும்.

6. ஏல்—ஏற்றுக்கொள். நோ—துன்பம்.

7. விழும் அன்றே—அழிந்து விடுமல்லவா ? ஒப்பு—சமம். பணி—தொழில். பழுது—குற்றம். கண்டீர்—முன்னிலை யசை.

8. நீர்மை—தன்மை. மாறா—நீங்காத. வையகம்—உலகம்.

9. கற்று+ஆ—கற்ரு. கரவாது—ஒளியாது.
10. எய்தும்—வந்து சேரும்.

வினாக்கள்

1. நல்வழி—இதன் பெயர்க் காரணம் கூறுக. இதன் ஆசிரியர் யார்?
2. உயர்ந்த குலத்தோர் யார்? இழி குலத்தோர் யார்?
3. மாந்தர் தொழில் யாது?
4. நல்ல குடியில் பிறந்தவர் இயல்பு யாது?
5. வயிற்றின் கொடுமைகள் யாவை?
6. உழவுத் தொழில் எவ்வாறு சிறந்ததாகும்?
7. எவை எவை எவ்வெவற்றுக்கு இன்றியமையாதவை?
8. கற்ருரைப் போன்றவர் யார்?
9. ஈசன் செயல்கள் யாவை?

பயிற்சி

1. ஈதொழிய, தீதொழிய, வேறில்லை, உலகூட்டும், விழுமன்றே—இவற்றைப் பிரித்துக் காட்டுக.
2. ஐந்தாவது செய்யுளின் ஈற்றடியைப் பதம் பிரித்துக் காட்டுக.
3. ஆண்டாண்டு தோறும், அழுது புரண்டாலும், இரந்தழைப்பார், போமின், சாற்றுங்கால்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. நன்னெறி

அன்பே அனைத்திலும் சிறந்தது

இல்லானுக் கன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லா மிருந்துமவற்(கு) என்செய்யும்?—நல்லாய்,
மொழியிலார்க் கேது முதுநூல்? தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு? 1

இன்சொல்லின் சிறப்பு

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
ததிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால் தண்
கதிர்வரவால் பொங்குங் கடல். [ணென் 2

தக்கார்க்குக் கொடுத்திடுக

தக்கார்க்கே ஈவர்; தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக்(கு) இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளிப்
புல்லுக்(கு) இறைப்பரோ போய்? 3

சினத்தை நீக்கவேண்டும்

உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரை தான்போர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. 4

கல்விச் செருக்கு வேண்டாம்

கடலே அனையம்யாம் கல்வியா லென்னும்
அடலே றனைய செருக்காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 5

—சிவப்பிரகாச சுவாமிகள்

குறிப்புரை

நன்மை + நெறி = நன்னெறி ; மக்கள் நடக்கவேண்டிய நல்ல வழிகளைத் தெரிவிப்பது. இதன் ஆசிரியர் சிவப் பிரகாச சுவாமிகள். இவர் உதாரணங்களை அமைத்துச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர். இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

1. அன்பு இங்கு இல்லானுக்கு எனக் கூட்டுக.

மொழி—பேச்சு. மொழியிலார்—ஊமைகள். விழியிலார்க்கு—குருடர்க்கு. ஊமைகளுக்கு முதுநூல் பயன் படாது ; குருடர்களுக்கு விளக்குப் பயன்படாது. மற்று—அசை.

2. இருநீர்—மிக்க நீரையுடைய கடல். வியனுலகம்—அகன்ற உலகம். வன்சொல்—அன்பு இல்லாத கடுஞ்சொல்லால். அதிர்வளையாய்—ஒலிக்கின்ற வளையலை யணிந்த பெண்ணே ! அழல்—நெருப்பு. கதிர்—கிரணங்கள். தண்மை—குளிர்ச்சி. கடல் சூரியனின் வெம்மை மிக்கக் கிரணங்களால் பொங்காது ; ஆனால் குளிர்ச்சி மிக்க சந்திரனின் கிரணங்களால் பொங்கும்.

3. தக்கார்—மேன்மை பொருந்தியவர், உத்தமர்.

4. உள்ளம்—மனம். தடங்கரை—விசாலமான கரை.

5. அடல்—வலிமை. ஏறு—ஆண் சிங்கம். முனிக்கு அரசு—முனிவர்களுக்கெல்லாம் அரசராகிய அகத்திய முனிவர். முழங்கும்—ஒலிக்கும். பனிக்கடல்—குளிர்ச்சி மிக்கக் கடல்.

வினாக்கள்

1. அன்பு எப்படி இன்றியமையாததாகும்? இதற்குக் காட்டப்பட்ட உவமையை விளக்கி எழுதுக.
2. இன் சொல்லின் சிறப்பு யாது?
3. விழுமியோர் யாருக்கு உதவுவர்? எதுபோல?
4. சிறந்த குணமாவது யாது?
5. முனிக்கரசு யார்? அவரால் உணர்த்தப்படும் நீதி யாது?

பயிற்சி

1. கீழ்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அழல், தண்மை, வியனுலகம், முது நூல்.

2. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களைக் கொண்டு நிரப்புக.

(அ) ——— இல்லானுக்கு என்ன இருந்தாலும் பயனில்லை.

(ஆ) உலகத்தவர் ——— அன்றி ——— என்றும் மகிழமாட்டார்கள்.

(இ) சந்திரன் கிரணங்களால் ——— பொங்கும்.

(ஈ) ——— கடலையும் குடித்தார்.

3. முதற் செய்யுளில் உள்ள உவமான உவமேயங்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக.

3. திருக்குறள்

(அரசியலாரால் குறிப்பிடப் பெற்றவை)

அகர முதல எழுத்தெல்லாம் : ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

அறத்தினூங்(கு) ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 2

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல். 3

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 4

விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று. 5

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம். 6

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 7

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 8

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 9

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 10

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 11

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்(து)
அழுக்கா றிலாத இயல்பு. 12

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? 13

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 14

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 15

நல்லா(று) எனினும் கொளல் தீது : மேல்உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 16

தோன்றிற் புகழொடு தோன்றுக : அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 17

புறந்தூய்மை நீரான் அமையும் ; அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 18

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 19

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 20

கற்க கசடறக் கற்பவை : கற்றபின்
நிற்க அதற்குத் தக. 21

எண்ணென்ப ; ஏனை எழுத்தென்ப : இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 22

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் : அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 23

அறிவுடையார் எல்லாம் உடையர் : அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 24

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 25

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் : மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 26

வெள்ளத் தனைய மலர்நீட்டம் : மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு. 27

நெடுநீர், மறவி, மடி, துயில் நான்கும்
கெடு நீரார் காமக் கலன். 28

முயற்சி திருவினை ஆக்கும் : முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 29

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 30

கருவியும், காலமும், செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட(து) அமைச்சு. 31

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 32

பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 33

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 34

குணமும், குடிமையும், குற்றமும், குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. 35

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 36

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் ; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 37

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 38

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 39

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 40

— திருவள்ளுவர்

குறிப்புரை

திருவள்ளுவர் இரண்டடிப் பாக்களால் அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். திருக்குறளைத் தமிழ் வேதம் என்றும் கூறுவர். திருக்குறளிற் கூறப்பட்டுள்ள நீதிகள் எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்தினருக்கும் பொருத்தமானவை. திருவள்ளுவர் ஏறக்குறைய 1,800 ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர்.

1. அகர முதல—'அ' என்னும் எழுத்தை முதலாக உடையவை. முதற்று—முதலாக உடையது.

2. அறத்தின் ஊங்கு—தருமத்தைவிட. ஆக்கம்—உயர்வு.

3. என் நோற்றான் கொல்?—என்ன தவம் செய்தானோ?

4. என்பும்—எலும்பாகிய உடம்பும். உரியர்—(உதவி புரிவதற்கு) சொந்தமாக்கிக் கொள்வர்.

5. விருந்து—விருந்தினர். புறத்தது ஆ—(தன் வீட்டின்) வெளியில் இருக்க. சாவா மருந்து—அமுதம்.

6. அமர்ந்து—விரும்பி. அகத்தான் ஆம்—உள்ளத்தோடு பொருந்திய.

7. நன்றி—பிறர் செய்த உபகாரம். நன்று அல்லது—தீமை.

8. சமன் செய்து—சமப்படுத்தி. சீர் தூக்கும்—எடையைக் காட்டும். கோல்—தராசு. அமைந்து—நடுவு நிலைமையில் பொருந்தி. ஒருபால்—ஒரு பக்கத்தில். கோடாமை—மாறுபாடு கொள்ளாமை. சான்றோர்—கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்.

9. உய்க்கும்—கொண்டு சேர்க்கும். ஆர் இருள்—நிறைந்த இருளாகிய நகரம்.

10. விழுப்பம்—மேன்மை. ஓம்பப்படும்—பாதுகாக்கப்படும்.

11. அகழ்வாரை—தன்னைத் தோண்டுபவரை. தலை—முதன்மையான தருமம்.

12. ஒழுக்காறு—ஒழுக்க நெறி. அழுக்காறு—பொறாமை.

13. ஏதிலார்—அயலாருடைய. காண்கிற்பின்—ஆராய்ந்தால். மன்னும்—நிலைபெற்ற.

14. தீய பயத்தலான்—துன்பம் உண்டாக்குவதால்,

15. ஊருணி—ஊரில் உள்ளார் தண்ணீர் உண்ணும் குளம். உலகு—உலகநடை. திரு—செல்வம்.

16. நல்லாறு—நல்ல வழி. (நன்மை + ஆறு.) கொளல்—கொள்ளுதல்.

17. தோன்றின்—பிறந்தால். புகழொடு—புகழுக்குக் காரணமாகிய குணத்தோடு.

18. புறந்தூய்மை—உடல் சுத்தம். அகந்தூய்மை—மனச் சுத்தம்.

19. சினம்—கோபம். காவாக்கால்—காவாவிடில்.

20. ஈனும்—தரும். கோள்—துணிவு, கொள்கை.

21. கசடு—குற்றம். அதற்குத் தக—அந்நூல்கள் கூறும் நெறிக்குத் தக்கபடி.

22. எண்—கணக்கு. என்ப—என்று கூறப்படுவன. எழுத்து இலக்கணம். என்ப—எனக் கூறுவர்.

23. செவிச் செல்வம்—கேள்விச் செல்வமாகிய அறிவு. தலை—முதன்மையானது.

24. எல்லாம்—எல்லாச் செல்வமும். இலர்—இல்லாத வறியர்.

25. எரி—நெருப்பு. வைத்தூறுபோல—வைக்கோல் போர் போல.

26. திரிந்து—வேறுபட்டு. அற்று ஆகும்—அத்தன்மையை உடையதாகும். இனம்—தான் சேரும் கூட்டம். அது ஆகும்— அக்கூட்டத்தின் குணமாகும்.

27. நீட்டம்—நீர்ப்பூங் கொடியின் நீளம்.

28. நெடுநீர்—காலம் தாழ்க்கும் தன்மை. மறவி—மறத்தல். மடி—சோம்பல். துயில்—தூக்கம். கெடுநீரார்—அழியும் குணம் உள்ளவர். காமக்கலன்—விரும்பி ஏறும் மரக்கலம்.

29. திருவினை—செல்வத்தை. முயற்று இன்மை—முயற்சி இல்லாமை (சோம்பல்). இன்மை—ஏழ்மை.

30. இடும்பை—துன்பம். உள்ள—நினைக்க.

31. வினை—காரியம். மாண்டது—சிறப்பாகப் பெற்றவன்.

32. ஈன்றாள்—தாயினுடைய. காண்பானாயினும்—தன் ஏழ்மை காரணமாகப் பார்த்து வருந்துபவனாயினும். பழிக்கும் வினை—அவமதிக்கும் தொழில்.

33. பிணி—நோய். ஏமம்—காவல். அணி—அழகு.

34. உடுக்கை—ஆடை. இடுக்கண்—துன்பம்—. களைவது—நீக்குவது.

35. குடிமை—குடிப்பிறப்பு. குன்று இனனும்—குறைவில்லாத சுற்றமும். நட்புயாக்க—நட்புச் செய்க.

36. வினை வேறு சொல் வேறு பட்டார்—தொழிலும் சொல்லும் வேறு வேறாக இருப்பவர். கனவினும் இன்னாது-கனவிலும் துன்பம் செய்யும்.

37. கிடந்தமை—செழுமை. கால்—முளை. குலம்—நற்குடி.

38. இழிந்தக் கடை—தாழ்ந்த நிலைமை அடைந்தால். இழிந்த—கீழே விழுந்து கிடந்த.

40. வாழ்வார்—மேலாக வாழ்பவர். தொழுது—பிறரை வணங்கி. பின்செல்பவர்—அவர் பின்னே செல்பவர்.

III. வரலாற்றுப் பகுதி

தேசிங்கு மன்னன் நவாபுக்கு ஓலை அனுப்புதல்

[தேசிங்கு செஞ்சியை ஆண்ட ஒரு சிற்றரசன். அவன் தோன்ற மல்லனிடம் செஞ்சிக்கோட்டை மன்னர்கள் தமக்குக் கப்பம்கட்ட வேண்டியதில்லை என டில்லிபாதுஷா உறுதி அளித்திருக்கிறார் என்று கூறிஆர்க்காட்டுநவாபுக்குப் பணம் கொடுக்க மறுத்து ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.]

அங்கே போட்ட நகாரு சத்தம்
நவாபு கேட்டானும்.
'அண்ணு வாடா, தம்பி வாடா,
பங்காரு நாய்க்க ! நீ
சல்-செஞ்சிக் கோட்டை பணமும் வந்தது
பங்காரு நாய்க்கனே !
சதுரு சமுக்காளம் போடச் சொன்னன்
நவாபு சைதுல்லா !
சராப்புப் பெட்டியை அழைக்கச் சொன்னன்
நவாபு சைதுல்லா !
தூங்கா விளக்கை வைக்கச் சொன்னன்
நவாபு சைதுல்லா !
நவாபு மாளிகையில் வந்தான்ஐயா
தோன்ற மல்லனும்.
கொள்ளுக் குற்றின உலக்கைபோல
முன்னே நின்றனும்.
தோன்ற மல்லனைக் கண்ணாலே கண்டான்
நவாபு சைதுல்லா.

" அடா-என்ன காரியம் பண்ணினுயடா
தோன்ற மல்லண்ணு ?
பணமுமெங்கே காசுமெங்கே,
தோன்றமல்லண்ணு ?"
" நூற்றெழுபத்திரண்டு பாளையப் பட்டுக்கு
நானே போயிருக்க
இத்தனை நாளும் இவனைப்போல
நானும் பார்த்ததில்லை !"

" வாயினுலே சொல்ல மாட்டேன்.
நவாபு சைதுல்லா !
செஞ்சிக்கோட்டையான் ஓலை எழுதினுன்
நவாபு சைதுல்லா !

ஓலை முகத்தைக்கண்ணாலே பாரும்
நவாபு சைதுல்லா !"
ஓலையெடுத்து எதிரிலே வைத்தான்
தோன்ற மல்லனும்.
" ஆயிரங் கணக்குப் பிள்ளைக்குப் பெரிய
கணக்குப் பிள்ளைவாரும்
வாசித்துப் பார்த்துச் சேதி சொல்லும்
ரங்கநாத பிள்ளை "
அந்த வேளையில் என்ன சொல்லுகிறான்
ரங்கநாத பிள்ளை ?
" நாளைக்கு வருகிற நவாபு சாயபை
இன்றைக்கு வரச்சொல்லும் ;
மீசை முளைத்த ஆண்பிள்ளையானால்
சண்டைக்கு வரச்சொல்லும் ;
கத்தி முனையில் பணமும் தருகிறேன்
நவாபுக் காளுலும்
போன வருஷத்துக் கிந்த வருஷம்
வரகு மெத்த விளைவாம்
வரகு வைக்கோல் மெத்தக் கிடைக்கும்
வாரிப் போகச் சொல்லும் ;
கோட்டையின் மேலே கல்லுக் கிடைக்கும்
வாரிப் போகச் சொல்லும் ;
கோட்டையின் வெளியே மணல் கிடைக்குமே
கொண்டு போகச் சொல்லும் ;
இத்தனை சமர்த்தும் இருந்ததே யானால்
இங்கே வரச் சொல்லும் ;
திராணியில்லாத பெண்பிளளையானால்
அங்கே நிற்கச் சொல்லும் ;

இந்தப்படியாய் எழுதியிருக்குது
நவாபு சைதுல்லா !"
இந்தச் சேதியைக் காதிலே கேட்டான்
நவாபு சைதுல்லா !
கேட்டவுடனே கொதித்தெழுந்தான்
நவாபு சைதுல்லா !
நீல விழிக்கண்கள் செளிந்தனவையா
நவாபுக் காணும் !
மீசை-பட பட வென்று துடித்ததையா
நவாபுக்-காணும் !
சல்-பட்டா உருவிக் கையிலேபிடித்தான்
நவாபு சைதுல்லா !

குறிப்புரை

இப் பகுதி தேசிங்கு ராஜன் கதை என்னும் நாட்டுப் பாடல் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

நகார்—முரசு. சராப்புப் பெட்டி—பணப் பெட்டி. சேதி—செய்தி. வரகு—ஒருவகைப் புன்செய்த் தானியம். கல்லு—கல். சமர்த்து—திறமை. இருக்குது—இருக்கிறது. பட்டா—பட்டாக்கத்தி.

வினாக்கள்

1. தோன்றமல்லன் நவாபுக்கு எதிரில் எப்படி நின்றான்? நவாபு அவனைப் பார்த்து என்ன சொன்னான்?

2. தேசிங்கு ராஜன் ஓலையில் என்ன எழுதப்பட்டிருந்தது?

3. தேசிங்கு ராஜனின் செய்தியை அறிந்த நவாபு எவ்வாறு கோபம் கொண்டான்?

4. "ஆயிரங் கணக்குப் பிள்ளைக்குப் பெரிய கணக்குப் பிள்ளை வாரும்!"—இதனைச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

IV. கதைப் பகுதி

தகாத ஆசை

நிந்தையில் சுவர்ண சித்தி
நிகழ்த்திய கதையைக் கேட்டே
" இந்தநற் கதைகேள் " என்றே
இயம்புஞ்சக் கரத ரன்றான் ;
" நந்துறு தடங்கள் சூழும்
நாரண புரத்தில் வாழும்
மந்தர நாமன் தந்து
வாயன் வத்திரங்கள் நெய்வோன். 1

தறிமரம் முறித லாலே
தக்கநன் மரம்வெட் டற்குச்
செறிவனந் தன்னிற் சென்று
திரிந்தொரு வாகை கண்டு
முறிபட வெட்டு தற்கு
முயலும்போ ததன்மேல் நின்ற
அறிவுறும் இயக்கன் நோக்கி
அவனொடு மொன்று சொல்வான் : 2

" இந்தவென் னிடத்தை வெட்டா
யென்னில் நீ இச்சை கொண்டு
வந்தநல் வரம்ஈ வேனென் "
என்றனன் ; மகிழ்ந்து மீண்டு
நந்தலில் நட்பா யுள்ள
நாவிதன் தன்னைக் கேட்க,
" மந்திரி யாவேன் நான் ; நீ
மன்னனும் வரங்கேள்," என்றான். 3

மனைவியோ டிதை யுரைக்க,
　　மற்றவள், " அரசு பெற்ருல்
கனவிடை யூறு மேவும் ;
　　ஆதலாற் காதலா ! நீ
இனமொரு தலையுங் கைகள்
　　இரண்டையும் பெற்ரு யாளுல்
தினமிரு தறி விரித்துச்
　　செய்யலாம் வேலை," என்ருள். 4

மாலையங் குழலாள் சொன்ன
　　வார்த்தையே நல்லதென்று
சாலியன் சென்று பெற்றுத்
　　தன்னக ருற்ருன் ; கண்டோர்

ஆலம்போர் அரக்க னுமென்(று)
ஆளுக்கோர் கல்லைக் கொண்டு
மேலுற எறிந்தார் ; செத்தான்
மெய்விகா ரங்கொண் டோனே.

— வீரமார்த்தாண்ட தேவர்

குறிப்புரை

இக்கதைப் பாடல் பஞ்சதந்திரப் பாடல்கள் என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது. நட்புப் பேறு, நட்புப் பிரித்தல், அடுத்துக் கெடுத்தல், நன்மைக்குத் தீமை, ஆராயாது செயல் ஆகிய இவை பஞ்சதந்திரங்கள் எனப்படும். நிகழ்த்திய—சொல்லிய. நந்தலில்—கெடாத. செறிவனம்—மரம் அடர்ந்த காடு. இயக்கன்—அரக்கன். கன இடையூறு—மிகுந்த துன்பம். இச்சை—விருப்பம். உற்றான்—அடைந்தான். குழல்—கூந்தல்.

வினாக்கள்

1. மந்தரன் ஏன் காட்டிற்குச் சென்றான்?
2. மாலையங் குழலாள் யார்? அவள் கூறியது யாது?
3. மந்தரன் பெற்ற தகாவரம் யாது?
4. மந்தரன் எவ்வாறு இறந்தான்?
5. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

பயிற்சி

1. திரிந்து, இயம்பும், இடையூறு, எறிந்தார், விகாரம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இக்கதையை மந்தரன் கூறுவதுபோல உரைநடைப் படுத்திக் கூறுக.

3. இக்கதையை மந்தரன் மனைவி கூறுவதுபோல மாற்றி எழுதுக.

V. வருணனைப் பகுதி

ஆலமரம்

இலையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும். 1

ஆலினைக் காற்று மோதும்
அசைவேனோ எனச்சி ரித்துக்
கோலத்துக் கிளைகு லுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில் லாமல்
தவித்திட்ட கிளைப்புள் ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும்! 2

—பாரதிதாசனார்

குறிப்புரை

பாரதிதாசன் அவர்கள் சுப்பிரமணிய பாரதியாரின் மாணவர் ஆவர். இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும். இவர் புதுவையில் வாழ்கிறார். இவர் பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்தவை. சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்தவை. கிளைப்புள் (கிள்ளைப்புள்)—கிளியாகிய பறவைகள் (அ) கிளைகளில் வசிக்கும் பறவைகள்.

வினாக்கள்

1. ஆலம் விழுதுபோல் தொங்கியது எது?

2. "விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப்போல்........."

—இந்த உவமையுடன் தகுந்த வாக்கியத்தைச் சேர்த்து எழுதுக.

3. ஆலமரத்தின் அடிமரம் எது போன்று இருந்தது?

4. பறவைகள் காற்றுக்கு நன்றி கூறக் காரணம் என்ன?

பயிற்சி

1. வெடுக்கென, கிளைதோறும், மோதும், தவித்திட்ட—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. முதற் பாடலில் உள்ள எழுவாய், பயனிலையை எடுத்து எழுதுக.

3. ஆலமரத்தின் பயன்களைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக

VI. பலவகைப் பாடல்கள்



பானைக்கும் யானைக்கும் சிலேடை

அங்குசவன் கைக்குருக்கொண் டாடும்: அரிசிகொளும்:
பொங்குதலைவெண்கோடு பூணுறுமால்;—தங்குபுடைத்
தானையொடு வந்திறங்கும் : தாவுகரி யாமிவற்றால்
பானைக்கு நேர்யானை பார். 1

—கரந்தைக் கவியரசர் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

பெரியோரும் சிறியோரும் கயவரும்

சொல்லாம லேபெரியர்; சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியும் செய்யார் கயவரே ;—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய், கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார். 2

—ஔவையார்

பூசணிக்காய் மகத்துவம்

மெய்வண்ண வீடுகட்ட உனைத்தொங்க விடுகிறார்கள்;
செய்வண்ண வேலை செய்து திருமாடம் முடிக்கின்றாய்நீ
பொய்வண்ணப் பூச ணிக்காய்! கறியுனைச் செய்துண்
[டேன் உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்; கறிவண்ணம்
[இங்குக் கண்டேன். 3

—பாரதிதாசனார்

பாரதியார் பாட்டின் பெருமை

அச்சமெனும் பெரும்பேயை அடித்துப் போக்கும்;
அடிமைமன விலங்குகளை அறுத்துத் தள்ளும்;
துச்சமென வருதுயரம் எதையும் தாங்கிச்
சுதந்திரத்தை விட்டுவிடாத் துணிவு தோன்றும்;
கொச்சைமிகும் பிறநாட்டு மயக்க மெல்லாம்
கூண்டோடு விட்டொழிக்கத் தெளிவும் கூட்டும்;
மெச்சிடும்நம் தாய்நாட்டின் நாக ரீகம்
மேன்மையெலாம் பாரதியார் பாட்டால் மேவும்.

—நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

மதியிலா மந்தி

மாலை ஒருநாள் வேலன் என்பான்
வேலை முடிந்து வெளியே செல்லக்
கண்ணாடி முன்னர்க் கனிவுடன் நின்றான்
தந்தச் சீப்பால் தலையை வாரினான்.
சுந்தர வடிவம் தோற்றிய பின்னர்
ஆடியும் சீப்பும் அறையில் வைத்தனன்.
வேலன் செயலை விருப்புடன் கண்ட
மந்தி யொன்று தந்திர மாக
அந்தப் புரம்செலும் அரசியைப் போன்றே
அவனறை சென்று ஆடியை எடுத்தது.
உள்ளே இருந்த உருவம் கண்டு
மற்றோர் குரங்கும் மருவிய தெனவே
உறுத்தது ; கீச்சென ஒலித்தது ; தலையை
அப்படி இப்படி அசைத்துப் பார்த்தது ;

சிப்பை ஆடியில் தேய்த்தது : முடிவில்
மதியிலா மந்தி மலர்க்கண் ணாடியை
எதிரியைத் தூக்கி இடுப்பொடிப் பவன்போல்
பொத்தெனக் கீழே போட்டுடைத் ததுவே!

—வித்துவான் தணிகை. உலகநாதன்

உடற்பயிற்சி

'சேவல் செருக்கினைக் காணீர்—அதன்
செல்வ நடைகண்டு நாணீர்—என்றும்
ஆவ லுடனுழைப் பீரேல்—மிக்க
ஆரோக்கி யம்பெறு வீரே. 1

கூனக் குரங்குகள் போல—உடல்
குன்றி இருந்திடல் ஆமோ?—அவ
மானமி தென்ன விடுப்பீர்—நிதம்
மார்பு நிமிர்ந்து நடப்பீர். 2

கட்டையும் வெட்டுதல் வேண்டும்—அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும்—சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும்—ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும். 3

தோள்கள் பருத்திடல் வேண்டும்—உயர்
தூய்மைக் குணங்களும் வேண்டும்—பல
நாள்கள் கழித்திடல் நன்றோ?—நந்தம்
நாடு செழித்திடல் என்றோ?

அல்லும் பகலும் உழைத்தே—பச்சை
அப்பனை போலத் தழைத்தே—பல
நல்லறம் நாடிப் புரிவோம்—இந்த
நன்மதி யாவும் மறவோம்.

—பேராசிரியர் மயிலை. சிவ முத்து

குறிப்புரை

1. கரந்தைக் கவியரசர், வேங்கடாசலம் பிள்ளை யவர்கள் பல்லாண்டுகளாகத் திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர், தொல்காப்பியம், அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற சங்க நூல்களுக்கு இவர் அரிய உரைகள் இயற்றியுள்ளார். தற்காலத்தே கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழ்ப் பணி புரிந்துவருகிறார்.

இச்செய்யுள் இருபொருள்படப் பாடப்பட்ட சிலேடைச் செய்யுளாகும்.

அம் குசவன்—அழகிய குயவன். அங்குச வன்கை—அங்குசத்தையுடைய வலிய கை. உருக்கொண்டு ஆடும்—உருவத்தைப் பெறுவதற்குச் சுழலும்; பயந்து அடங்கி நடக்கும். தானை—துணி, படை.

2. ஔவையார் என்னும் பெயருடன் இரண்டு மூன்று பெண்பாற் புலவர்கள் உண்டு. இவர் சங்க காலத்து ஔவையாருக்குப் பிற்பட்டவர் ஆவர். இவரும் கம்பரும் சமகாலப் புலவர்கள் என்று சிலர் கூறுவர்.

குலாம்—விளங்குகின்ற. கூறு + உவமை = கூறுவமை, —சொல்லத் தகுந்த ஒப்பு. நாடில்—ஆராயின்.

3. வண்ணம்—திறமை, நிறம், உருவம் முதலிய பல பொருளில் வந்த ஒரு சொல்.

4. நாமக்கல் கவிஞர், இராமலிங்கம் பிள்ளை அவர்கள் மகாத்மா காந்தியடிகளாரிடம் மிக்க அன்புடையவர்; தமிழ்நாட்டு அரசவைக் கவிஞர் என்று பாராட்டப்பட்டவர். இவர் பாடிய தேசியப் பாடல்கள் படித்து இன்புறத்தக்கவை.

துச்சம்—அற்பம். கொச்சை மிகும்—இழிவு மிகுந்த; கூண்டோடு—அடியோடு.

5. உண்மை நிகழ்ச்சி ஒன்றை உளத்திற்கொண்டு ஆசிரியர் வித்துவான். தணிகை. உலகநாதன் அவர்கள் இதனைப் பாடியுள்ளார். இவர் சென்னை இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியும், மாணவர் மன்றத்தில் தமிழ்ப்பணியும் ஆற்றி வருகிறார்.

ஆடி—கண்ணாடி. உறுத்தது—கோபித்தது.

உடற்பயிற்சி என்னும் பாடல்களைப் பாடிய புலவர் மயிலை. சிவமுத்து அவர்கள் சென்னையில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் தமிழாசிரியர்கள் முன்னேற்றத்துக்காகவும் புரியும் தொண்டுகள் அளவில்லாதவை. மாணவர் மன்றம் என்னும் தமிழ்க் கழகத்தின் வாயிலாகப் பல துறையிலும் மாணவர்களுக்குத் தமிழ் உணர்ச்சியை ஊட்டி வருகிறார்.

செருக்கு—பெருமிதம். மேதினி—பூமி. கூனல்—வளைந்த. (அல்லும் பகலும்) அல்—இரவு. உலகு அஞ்சுதல்—இங்கு அஞ்சுதல் அறியாமை நோக்கி. உலகு—உலகில் உள்ள பெரியோர். நிதம்—தினந்தோறும். பேதை—அறிவிலி.

வினாக்கள்

1. சிறியவர், கயவர்—இவருக்குள்ள வேறுபாடு என்ன?

2. இரண்டாம் பாட்டில் உள்ள வேற்கண்ணும் என்பது என்ன முன்னிலை?

3. பானை எவ்வாறு யானையைப் போன்றதாகும்?

4. பூசணிக்காயின் பெருமைகள் யாவை?

5. பாரதியார் பாடல்களினால் உண்டாகும் நன்மைகள் யாவை?

6. நாம் எவ்வெவ் விதங்களில் பயிற்சி பெற வேண்டும்?

7. வித்யாசாகரர், பச்சையப்பர்—இவர்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

பயிற்சி

1. 'மதியிலா மந்தி' என்னும் நிகழ்ச்சியை வேலன் உன்னிடம் நேரில் கூறுவதுபோல் மாற்றி எழுதுக.

2. செல்வ நடை, கூனற் குரங்கு, அல்லும் பகலும்—இத்தொடர்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. கூனற் குரங்கு, மானமிதென்ன, நல்லறம், உலகஞ்சும்—இவற்றைப் பதம் பிரித்து எழுதுக.

5. வீரம், ஆரோக்கியம், நிமிர்ந்து, கெஞ்சும்—இவற்றின் எதிர்ப்பதங்கள் யாவை?

உரைநடைப் பகுதி

1. அன்புநெறி காத்த அண்ணல்

உலகில் மகாத்மா காந்தியடிகளை அறியாத மக்கள் யாருமே இருக்கமாட்டார்கள். பரம்பரை பரம்பரை யாக அந்நியர் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த நம் தாய்நாட் டுக்கு அன்புநெறியால் விடுதலை வாங்கித்தந்த பெருமை நம் காந்தியடிகளுக்கே உரியதாகும். 'கத்தியின்றி ரத்த மின்றி' விடுதலைப் போரில் வெற்றி கண்ட வீரர் அவரே. அண்ணல் காந்தியின் வரலாற்றினை எல்லா மாணவர் களும் உணர்ந்து அவர்தம் அன்புநெறி நின்று நாட்டுக் குச் சேவை புரிதல் சாலச் சிறந்த கடமையாகும்.

மகாத்மா காந்தியடிகள் கி. பி. 1869-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள் கத்தியவார் தீபகற்பத்தில் போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையார் கபா. காந்தி என்பவராவர். அவர் தாயார் புத்திலிபாா என்பவராவர். அவருக்கு மூத்த சகோதரர்கள் இரு வரும் மூத்த சகோதரிகள் மூவரும் உண்டு.

நம் காந்தியடிகள் இளமைப் பருவத்திலேயே கற் பனவற்றைக் கசடறக் கற்றுச் சிறந்த ஒழுக்கத்துடன் விளங்கினார். சிறு வயதிலேயே தம்முடைய தாய் மொழியாகிய குஜராத்தியில் மிகவும் வல்லவரானார். அவர்தம் பதின்மூன்றாம் வயதில் அவருடைய பெற்றோர் கஸ்தூரி என்னும் பெண்மணியை அவருக்கு மணம் செய்வித்தனர். இளமையிலேயே அவர் மணம் புரிந்து கொண்டிருந்தாலும் கல்வியிலேயே கருத்தைச் செலுத் தினார். தம் பள்ளிப் படிப்பு முடிந்ததும் சட்டப் படிப்

புக்காக இலண்டனுக்குப் புறப்பட்டார். இலண்டனுக்குச் செல்லும்போது அவருடைய தாயார் அவரைப் பார்த்து, "என் செல்வக் குழந்தாய், இலண்டனுக்குச் சென்ருல் அங்நாட்டு மக்களின் பழக்கமாகிய மது அருந்துதல், மாமிசம் தின்னுதல் போன்ற தீப்பழக்கங்களில் ஈடுபட வேண்டும்; எனவே நீ அங்குப் போதல் தகாது," என்று கூறினுர். காந்தியடிகள் தம் அன்னையிடம் மது அருந்துவதில்லையென்றும், மாமிசம் தின்பதில்லையென்றும், பிறமாதர்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லையென்றும் உறுதி கூறி இலண்டன் மாநகருக்குப் புறப்பட்டார். இலண்டனில் வெள்ளையரின் போலி நாகரிக வாழ்க்கையைக் காந்தியடிகள் வெறுத்தார். தம் அன்னையாரிடம் அளித்த வாக்குறுதிகளில் ஒரு சிறிதும் தவருமல் தமது சட்டப்படிப்பில் தேர்ச்சியுற்று இந்தியாவுக்குத் திரும்பினுர்.

காந்தியார் பம்பாய் நகரத்தில் தம் வழக்கறிஞர் தொழிலைத் திறம்பட நடத்தி வந்தார். அவர் பொய் வழக்குகளுக்காக நீதி மன்றங்களில் எப்போதும் வாதிட்டதில்லை. தென்னுப்பிரிக்காவில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவர் பெயர் அப்துல்லா சேட் என்பது. அவர் வழக்கு ஒன்றை நடத்துவதற்காகக் காந்தியடிகளை அழைத்திருந்தார். காந்தியடிகளாரும் அவர் வேண்டுகோளுக்கு இனங்கித் தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

அடிகள் தென்னுப்பிரிக்காவில் இருக்கும்போது, இந்தியாவிலிருந்து அங்குக் கூலியாட்களாகக் குடியேறி இருக்கும் மக்கள், பலவிதங்களில் கொடுமைப்படுத்தப் பட்ட நிலையைக்கண்டு வருந்தினுர். ஆக்காலத்தில்

தென்னப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்கள் உரிமையுடன் வாழமுடியாது. அக்காலத்தில் அவர்கள் அங்குக் கூலியாட்களாகத்தான் இருக்கவேண்டும்; உணவு விடுதிகளில் வேலை செய்யவேண்டும்; இல்லையேல் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும். எல்லோரையும் போல இந்தியர்கள் பொது இடங்களில் வாழலாகாது; ஒதுக்கப்பட்ட தனி இடங்களிலேயே குடியிருக்கவேண்டும். செல்வம் சேர்த்தாலும் சொந்த நிலம் வாங்கிச் சுகமாக இருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அரசியலில் அவர்களுக்கு வாக்குரிமையொன்றும் கிடையாது. இரவில் ஒன்பது மணிக்குமேல் இந்தியர் வெளியே நடமாடக்கூடாது. உத்தரவு பெற்றவர்களுக்கே வெளியே உலாவுவதற்கு உரிமையுண்டு. இன்னோரன்ன கொடுமைகளைக் கண்ட நம் காந்தியடிகளார் மனம் அனலில் விழுந்த புழுப்போல் துடித்தது.

தென்னப்பிரிக்காவில் ஒரு சமயம் அவர் இரவு ஒன்பது மணிக்குமேல் உலாவிக்கொண்டிருந்தார். அது கண்ட காவலன் ஒருவன் அவரைக் காலால் உதைத்துக் கீழே தள்ளினான். அதனைப் பார்த்த ஒரு செல்வர் அக்காவலன் செயல்பற்றி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்படி காந்தியடிகளுக்குக் கூறினார். அதற்குக் காந்தியடிகள், "என குறைக்காக நான் ஒன்றும் வழக்குத் தொடரமாட்டேன். இந்தியர் யாவரும் படும் துன்பத்தையே நானும் அனுபவித்தேன்," என்று சொல்லிவிட்டு ஒன்றும் செய்யாமல் போய்விட்டார்.

தென்னப்பிரிக்காவில் பாலசுந்தரம் என்னும் தமிழ் நாட்டான் ஒருவன் வெள்ளை முதலாளியிடம் கூலியாளாக அமர்ந்திருந்தான். அவன் ஒரு சமயம் முதலாளி

யால் தாக்கப்பட்டு முன்பல் உடைந்து இரத்தம் சிந்தக் காந்தியண்ணலிடம் தன் குறையை முறையிட்டான். அவன் துன்பத்தைப் பொறுமையுடன் கேட்டிருந்த மகாத்மா அவனுக்காக நீதி மன்றத்தில் வழக்காடி வென்று அவனை வேறு ஒருவரிடம் வேலைக்கு அமர்த்தி விட்டார். தன்னலம் பாராது பிறர் நலத்துக்குழைப்ப வர் காந்தியடிகள் என்பது இந்நிகழ்ச்சியால் விளங்கு கின்றதல்லவா?

காந்தியார் ஒரு சமயம் பிரிடோரியா என்னும் ஊருக்கு ரெயிலில் முதல் வகுப்பு நுழைவுச்சீட்டு வாங் கிச்சென்றார். அதைக்கண்ட ஒருவெள்ளைக்கார அதிகாரி "இந்தியர்கள் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யக் கூடாது; வேறு வகுப்பில்தான் ஏறிச்செல்லவேண்டும்" என்று கூறினன். அதற்குக் காந்தியடிகள் தாம் முதல் வகுப்பு 'டிக்கட்டு' வாங்கி இருப்பதாகவும், அத ஞல் முதல் வகுப்பிலேதான் பிரயாணம் செய்யமுடியு மென்றும் கூறினர். அவர் பேச்சைக்கேட்டு ஆத்திரங் கொண்ட அவ் வெள்ளையன் அவரைத் தாறுமாருகத் திட்டி ஒரு காவலனைக்கொண்டு வெளியேற்றச் செய் தான். அவ்வெள்ளை அதிகாரியின் அறிவின்மையைக் கண்டு அண்ணல் காந்தியார் உள்ளம் உருகினரே யொழிய வேறொன்றும் செய்யவில்லை.

மகாத்மா தென்னப்பிரிக்காவுக்குத் தாம் எவ்வழக் கினை நடத்துவதற்காகச் சென்ருரோ அதனை இருசாரா ரும் மனவருத்தம் கொள்ளாதிருக்கும் வகையில் சமா தானமாகவே தீர்த்து வைத்தார். தென்னப்பிரிக்காவில் நிகழ்ந்த மற்றும் சில வழக்குகளையும் இங்ஙனமே சமா தான முறையில் தீர்த்து வைத்தார். எனவே, மகாத்மா

வின் அறிவுத் திறமையை வியவாதவர் அங்கு எவரும் இல்லை என்றே சொல்லலாம். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளார் இந்தியத் தொழிலாளரின் நிலைமையை உயர்த்தும் போராட்டத்திலும் ஓரளவுக்கு வெற்றிபெற்றார். ஏறக்குறைய இருபது ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவிலேயே தங்கி வெள்ளையரின் கொடுமைகளை நீக்கினார்.

இத்தகைய வெற்றிகளுடன் நம் காந்தியண்ணல் தம் தாய்நாட்டிற்குத் திரும்பினார். இந்தியர் தம் சொந்த நாட்டிலேயே அந்நியர் ஆதிக்கத்தில் படும் அல்லல்களைக் கண்ணுற்றார். இந்தியா பூரண விடுதலை பெற்றால் ஒழிய மக்கள் நலமாக வாழ வழியில்லை என்பதை உணர்ந்தார். மெய் வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், கண்துஞ்சாமலும், இந்திய விடுதலைக்காக அரும்பாடு பட்டார். கிராமந்தோறும் சென்று பிரசாரங்கள் புரிந்தார். அவர் அறவுரைகளைக் கேட்ட மக்கள் அவர் வழியைப் பின்பற்றி நாட்டுக்குத் தொண்டாற்ற முன்வந்தனர். நம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலிய அறப்போர்களை நடத்தியதன் பலனாகப் பலமுறை சிறைப்பட்டார்; தடியடிகளுக்கும் ஆளானார். நாட்டு விடுதலையின் பொருட்டு அவர் செய்த தியாகங்களுக்கு அளவேயில்லை.

தீண்டாமையைப் போக்குவதற்கும் மதுவரக்கனை ஒழிப்பதற்கும் பெரிதும் உழைத்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக இரவும் பகலும் பாடுபட்டார். கிழக்கு வங்காளத்தில் நிகழ்ந்த பெருங் குழப்பம் மகாத்மா காந்தியாரின் சேவையினால் நீங்கிற்று. "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந்திய மக்

கள்" என்னும் உயர்ந்த கருத்தை நிலைநாட்டியவர் காந்தியடிகளே ஆவர். அவர்தம் அரிய தொண்டினால் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாளில் நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத் திருநாளை மக்கள் நாடெங்கும் ஆடம்பரத்துடன் கொண்டாடினர்.

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும் மக்களுள் ஒற்றுமை காணப்படவில்லை. முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கு மிடையில் அடிக்கடி நேர்ந்த பூசல்களைக் கண்டு மகாத்மா மனம் புழுங்கினார். இருசாராரின் ஒற்றுமைக்காக உண்ணாவிரதம் பூண்டு நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்.

செயற்கரும் செயல்கள் பல புரிந்த தியாகியாகிய நம் காந்தியடிகள் 1948-ஆம் ஆண்டு ஜனவரி 30-ஆம் நாள் பிர்லா மாளிகையிலிருந்து பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றார். செல்லும்போது நேரில் வணங்குவதுபோல் வந்த நயவஞ்சகன் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். ஆருயிர்கட்குழைத்த அண்ணலின் திருமேனி, 'இராமா' என்று கூறிக் கொண்டே மண்ணில் சாய்ந்தது. உலக மக்கள் எல்லோருமே துன்பக்கடலில் ஆழ்ந்தனர். அந்தோ! அறநெறித்தோன்றல் நம்மைவிட்டு அகன்றனரே!

காந்தியடிகளின் பூதவுடல் மறைந்தது. அவர் நமக்காகக் கூறிய அறவுரைகள் இன்னும் மறையவில்லை; அவை என்றும் மறையா! காந்தியடிகளின் நீதி உரைகளை நாம் பின்பற்றி நடப்போமாயின் அதுவே அவருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையும் கடமையும் ஆகும்.

காந்தியடிகளாரின் திருப்பெயர் வாழ்க!

பயிற்சி

பொருளறிக :

அன்புநெறி	சால	வாக்குறுதி
ஆதிக்கம்	பரம்பரை	
கசடற	பூதவுடல்	

கீழ்க்கண்ட தொடர்மொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

கத்தியின்றி ரத்தமின்றி, சாலச்சிறந்த, கசடறக் கற்று, இன்னோரன்ன, அனலில் விழுந்த புழுப்போல, துடிதுடித்து.

விடை கூறுக :

1. மகாத்மா காந்தியடிகள் எங்கே எப்போது பிறந்தார்?
2. அவர் இளமை நாட்களைப் பற்றி எழுதுக.
3. அவர் தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதி யாது?
4. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் செய்த தொண்டுகள் யாவை?
4. "அன்புநெறி காத்த அண்ணல் காந்தி"—என்பதனை எவ்வாறு அறியலாம்?

தெரிந்துகொள் :

ஒவ்வோராண்டிலும் ஆகஸ்டு 15-ஆம் நாளில் சுதந்திர விழாவும் அக்டோபர் 2-ஆம் நாள் காந்தி பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

இலக்கணப் பயிற்சி

1. காந்தி அண்ணல் இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்டார்.

2. நான் மாலை நான்கு மணிக்கு

முதல் தொகுதியில் சொற்றொடர்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கின்றன.

இரண்டாம் தொகுதியில் சொற்கள் தொடர்ந்து நிற்பினும் கருத்து முற்றுப் பெறவில்லை.

கருத்து முற்றுப்பெற்ற சொற்றொடரே வாக்கியம் எனப்படும்.

1. தென்னாப்பிரிக்காவில் இந்தியர் கூலிவேலை செய்தனர்.

2. காந்தியடிகள் இந்தியர் துன்பங்களை நீக்கினர்.

இங்ஙனம் குறைந்தது ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்ட வாக்கியங்கள் '**தனிநிலை வாக்கியங்கள்**' எனப்படும்.

இப் பாடத்திலிருந்து ஐந்து தனிநிலை வாக்கியங்களை எடுத்து எழுதி அவற்றின் எழுவாய், பயனிலைகளைக் கண்டு பிடி.

2. மைனாவும் முயலும்

முன்னொரு காலத்தில் யமுனை நதிக்கு அருகில் ஒரு சோலை இருந்தது. அச் சோலையில் ஒரு மரப் பொந்து இருந்தது. அந்த மரப்பொந்தில் மைனா ஒன்று வசித்து வந்தது. ஒருநாள் அந்த மைனா வெளியே சென்றிருக்கும்போது முயலொன்று வந்து அம் மரப்பொந்தில் குடியிருந்தது.

வெளியே சென்ற மைனா திரும்பி வந்தது. தன் பொந்தில் ஒரு முயல் தங்கி இருப்பதைப் பார்த்துச் சினம் கொண்டது. உடனே அப்பறவை முயலைப்

பார்த்து, "ஏ முயலே, இப்பொழுது நான் வாழும் வீடு ஆகும். நீ இங்கு வந்து தங்குவது அடாத காரியம். போ வெளியே," என்று சொன்னது.

முயல்: உன் வீடாவது, என் வீடாவது. மரங்கள், நிழல், சாலைகள், குளங்கள், கிணறுகள் தண்ணீர்ப் பந்தல், சாவடி முதலிய இடங்கள் எல்லோருக்கும் பொதுவான இடங்களே யன்றித் தனிப்பட்ட ஒருவருக்கும் உரிமையாகா.

மைனா: முயலே! என் வீட்டில் நீ வலுவில் வந்து தங்கியது மல்லாமல் எனக்கே நீதி போதிக்கவும் ஆரம்பித்து விட்டாயே; மரியாதையாக வெளியே போய்விடு.

முயல்: என்ன சொன்னாலும் நான் போகவே மாட்டேன்.

இப்படியே இரண்டும் நெடுநேரம் சண்டை போட்டன. இறுதியில் தம் வழக்கை ஒரு நடுநிலையாளரிடம் சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம் என்னும் முடிவுக்கு ஒப்புக்கொண்டன.

மைனா முயலைப் பார்த்து, "நம் வழக்கை நன்கு விசாரித்து நல்ல தீர்ப்பு அளிக்க வல்ல உத்தமர் யார்?" என்று கேட்டது. அதற்கு முயல், "யமுனை யாற்றங் கரையில் கூர்ம்பல்லன் என்னும் பூனையார் தவம் செய்துகொண்டிருக்கிறார். அவரிடம் நாம் சென்றால் நம் வழக்கைப் பட்சாதாபம் இல்லாமல் தீர்த்து வைப்பார்" என்று கூறிற்று. மைனாவும் அதற்கு ஒப்புக் கொண்டு முயலுடன் கூர்ம்பல்லனைத் தேடிச் சென்றது. பூனையின் அருகே சென்றால் அது தம்மைக் கொன்று விடும் என்று அஞ்சித் தொலைவில் இருந்து

கொண்டே வழக்கைக் கூறுவதாக இரண்டும் முடிவு செய்தன.

அந்தப் பூனை யமுனை யாற்றங்கரையில் தவம்புரிந்து கொண்டிருந்தது. அஃது ஒரு கையில் ஜபமாலையும் மற்றொரு கையில் கமண்டலமும் கழுத்தில் உருத்திராக்க



மாலையும் தரித்து முனிவர் போலவே யோகத்தில் ஆழ்ந்திருப்பதாகப் பாவனை செய்தது. மைனாவும் முயலும் பூனையை வணங்கி நின்றன. பூனை யோகத்திலிருந்து நீங்கி மைனாவையும் முயலையும் பார்த்து, "நீங்கள் யார்? எம்மை எப்படி அறிந்தீர்கள்? இங்கு வந்த காரணம் என்ன?" என்று வினவிற்று. மைனாவும் முயலும் தம்முடைய பேரையும் வழக்கையும் அந்தப் போலித் துறவியான பூனையாரிடம் கூறின.

அவற்றின் பேச்சைக் கேட்ட பூனையார், "குழந்தைகாள்! நானோ தொண்டு கிழவன்: மூப்பினால் எம் காதுகளும் சரியாகக் கேட்பதில்லை; நீங்கள் என்ன

சொன்னாலும் எமக்கு அருகில் வந்து சொன்னால்தான் அதை யாம் கேட்க முடியும்," என்று சொல்லிற்று. அதற்கு மைனாவும் முயலும், "பெரியீர்! நாங்கள் எப்படித் தங்கள் அருகில் வருவோம்; வந்தால் நீங்கள் எங்களைக் கொன்று விட்டால் என்ன செய்வோம்? தயவு செய்து தொலைவில் இருந்தே எம் வழக்கை விசாரித்து முடிவு கூறவேண்டும்," என்று முறையிட்டன. உடனே கூர்ம்பல்லன், "சிவ, சிவ, என்ன சொன்னீர்கள்? உங்கள் பேச்சு எமக்குப் பாதி கேட்பதும் பாதி கேளாததுமாக இருக்கிறது. பட்சபாதமென்பதே எம்மிடம் இம்மியும் காணமுடியாது. 'தருமம் தலைகாக்கும்,' என்பது பழமொழியல்லவா? சத்தியம் தவறி நடப்பவர்கள் ஆண்டவனால் தண்டிக்கப் படுவார்கள். ஆகையால், யாம் எப்பொழுதும் மெய்யே பேசுவோமேயன்றி ஒருசிறிதும் பொய்யே பேசமாட்டோம். கொல்லா விரதம், பொய் சொல்லா விரதம் என்னுமிரண்டுமே எம்மால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களாகும். தூரத்திலிருந்து சொன்னால் ஒன்றும் கேளாது. நியாயம் வழங்க வேண்டுமானால் எம் அருகே வந்து உங்கள் வழக்கைக் கூறுங்கள். உங்களுக்கு ஒரு துன்பமும் செய்யமாட்டோம். சிவ! சிவ!" என்று நயமாகக் கூறிற்று. பூனையின் பேச்சை மெய் என்று நம்பிய அந்த மூடப் பறவையும் முயலும் அதன் அருகே சென்று நின்றன. உடனே கூர்ம்பல்லன் அவற்றை இறுகப் பிடித்துக் கடித்துக் கொன்று தின்றது.

செல்வச் சிறுவர் சிறுமியரே! இக் கதையினால் நீங்கள் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்? உத்தமர்போலப் பாசாங்கு செய்யும் பகைவர்களை நம்பி ஒருபோதும்

அவர்களுடன் உறவாடக்கூடாது. பகைவர்கள், சந்நியாசிகளைப் போலவும், சுற்றத்தினரைப் போலவும் நம்முடன் பழகினாலும் அவர்கள் தன்மைகளை நன்கு ஆராய்ந்து அவர்கள் தொடர்பிலிருந்து நீங்குவதே நல்ல நெறியாகும்.

'தீயாரைக் காண்பதுவும் தீதே : திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவும் தீதே : தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே ; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.

பயிற்சி

பொருளறிக :

அனுட்டித்தல்	நடுநிலையாளரிடம்
இணங்கி	பட்சபாதம்
திருவற்ற	மூப்பு
தீர்ப்பு	வழக்கு

விடை தருக :

1. மைனாவுக்கும் முயலுக்கும் ஏற்பட்ட வழக்கு என்ன ?
2. அந்த வழக்கைத் தீர்த்துக்கொள்ள அவை யாரிடம் சென்றன ?
3. வழக்கின் தீர்ப்பு என்ன ஆயிற்று ?
4. இக் கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளும் நீதி என்ன ?

தெரிந்துகொள் :

இக் கதை பஞ்ச தந்திரப் பாடலைத் தழுவி எழுதப்பட்டது. பஞ்ச தந்திரப் பாடல் வீரமார்த்தாண்ட தேவ

ரால் எழுதப்பட்டது. உரைநடை, வித்துவான் தாண்டவ ராய முதலியரால் எழுதப்பட்டது.

இலக்கணப் பயிற்சி

1. கந்தனும் நந்தனும் சந்தைக்குப் போனார்கள்.

2. நான் கூப்பிட்டேன்; ஆனால் உனக்குக் கேட்கவில்லை.

இங்ஙனம் பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டும் ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டும் வரும் வாக்கியங்கள் தொடர் வாக்கியங்கள் எனப்படும்.

1. நெருக்கமாக வந்து சொன்னால்தான், எம் காதுகள் கேட்கும்.

2. மைனா வெளியே சென்றபோது, முயல் மரப் பொந்தில் தங்கிற்று.

இங்ஙனம் ஒரு முக்கியமான வாக்கியத்தையும் ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்களையும் பெற்றுவரும் வாக்கியம் கலவை வாக்கியம் எனப்படும்.

மேலே தரப்பட்ட உதாரணங்களைக் கவனித்து இப் பாடத்திலிருந்து தொடர்நிலை வாக்கியங்களுக்கும், கலவை வாக்கியங்களுக்கும் இரண்டிரண்டு உதாரணங்களை எடுத்து எழுதுக.

3. கோபாலனும் கிராமவாசியும்

(ஓர் உரையாடல்)

கிராமவாசி: தம்பி, உன்னைப் பார்த்தால் பட்டணத்துப் பிள்ளை போலிருக்கிறாயே! உன் சொந்த ஊர் இந்த ஊர் தானா?

கோபாலன்: இல்லை, பக்கத்து ஊரில் என் மாமா இருக்கிறார். நான் பிறந்ததும் வளர்ந்ததும் பட்டணந் தான். என் தகப்பனார் அங்கே உத்தியோகத்தில் இருக்கிறார். விடுமுறையாகையால் நான் இந்தக் கிராமத்தைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

கிராமவாசி: பட்டணத்திலே நலமாக வாழும் உங்களைப் போன்ற செல்வச் சிறுவர்கள் கிராமங்களைப் பார்க்க வருவது வியப்பாகவே இருக்கிறது!

கோபாலன்: ஏன் தாத்தா! நாங்கள் கிராமங்களைப் பார்க்கக் கூடாதோ! நான் இதுவரையில் கிராமங்களை வந்து பார்த்ததில்லை. கிராமங்களின் நிலைமையைப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். நேரில் பார்க்கவே இப்பொழுது வந்தேன்.

கிராமவாசி: தம்பி! மிகவும் சந்தோஷம். உங்களைப்போன்ற இளைஞர்கள் கிராமங்களைப் பார்வையிடுவதுதான் நல்லது. அப்பொழுதுதான் இங்குள்ள குறைகளை நீக்கி எங்களுக்கு ஒத்தாசை புரிய நகரத்தாருக்கு ஆர்வம் உண்டாகும்.

கோபாலன்: கிராமங்களே நகரத்தாரின் உயிர் நாடி. நீங்கள் இங்குத் தொழில் செய்யாவிடில் எங்களுக்கு உணவு ஏது? உடை ஏது? உறைவிடம் ஏது?

கிராமவாசி : குழந்தாய்! நீ மிகவும் அறிவாளி. கிராமத்தைப்பற்றி உயர்வாகவே மதிக்கிருய் என்பதைக் காண நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மெதுவாக என்னுடன் வா. இந்தக் கிராமத்தைச் சுற்றிக் காட்டுகிறேன்.

கோபாலன் : நல்லது. அப்படியே செய்யலாம்.

கிராமவாசி : இதோ, பார் தம்பி. இந்தக் குடிசைகளில்தான் நாங்கள் வசிக்கிறோம். அதோ சற்றுப் பெரிதாக ஒரு வீடு தெரிகிறதே, அதுதான் கிராமத் தலைவரின் வீடு.

கோபாலன் : கிராமவாசிகளாகிய நீங்கள் இப்படிக் குடிசைகளில் தங்கித் துன்பப்படுகிறீர்கள். பட்டணங்களிலோ மக்கள் மாட மாளிகையில் தங்கி மகிழ்கின்றனர்.

கிராமவாசி : உங்களைப்போல் நாங்கள் பட்டணங்களில் நெருக்கமான வீடுகளில் இருந்து புழுங்கி வருந்தாமல் இங்கே காற்றோட்டமான அகன்ற வெளிகளில் வாழ்வதுதான் எங்களுக்கு இன்பமான வாழ்க்கையாக இருககிறது.

கோபாலன் : இருந்தாலும் தெருவெல்லாம் இப்படிக் கோணலாகவும் மேடுபள்ளமாகவும் குறுக்கும் நெடுக்குமாகவும் இருக்கின்றனவே! இந்த இடங்களில் வண்டிகள் எப்படிச் செல்லுமோ?

கிராமவாசி : ஏன் செல்வதில்லை? அடிக்கடி மாட்டு வண்டிகள் சென்று இதோ தேய்ந்திருககும் இடங்களை நீ பார்க்கவில்லையா?

கோபாலன் : பார்த்தேன். இவ்வளவு குறுகலான பாதைகளில் வண்டிகள வந்தால் எதிரில் வரும் மனிதர் கதி என்னுவது? வழியில் மாட்டுச் சாணமும்

சேற்று நீரும் தீ நாற்றமடிக்கின்றனவே! இப்படி இருந்தால் தொற்று நோய்கள் பரவ ஏதுவாகுமே! இவற்றை நீங்கள் கவனிப்பதில்லையா?

கிராமவாசி: வண்டிகள் வந்தால் ஏதாவது வீட்டின் வாயிற்படியில் ஏறி ஒதுங்கிக்கொள்ளவேண்டியது தான், என்ன செய்வது? கிராமத்தின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. எங்களால் ஆனவரையில் சீர்திருத்தம் செய்துகொண்டுதான் வருகிறோம்.

கோபாலன்: தாத்தா, அதோ தெரிகிறதே! அந்தக் கட்டடம் என்ன கட்டடம்?

கிராமவாசி: அதுதான் இந்தக் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடம். பள்ளிக்கூடம் என்ற பேரே ஒழியப் பிள்ளைகள் சரியாகப் போவதில்லை.

கோபாலன்: ஏன் அப்படி? பிள்ளைகள் சரியாகப் பள்ளிக்குப் போகாவிட்டால் இங்குப் பள்ளிக்கூடம் இருந்து என்ன பயன்? அறியாமையைப் போக்குவதற்குக் கல்வியறிவு அவசியமல்லவா?

கிராமவாசி: என்ன செய்வது? சிலர் தம் ஜீவனத்துக்குத் துணையாக இருக்கவேண்டுமென்று தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. சிலர் படிப்பின் அருமையையும் உணருவதில்லை.

கோபாலன்: அப்படிச் செய்வது மிகவும் தவறான காரியமாகும். அதனால்தான் கிராமத்தினர் முன்னேற்றமடைவதில்லை. நமது தேசத்தின் சிறப்பு கிராமத்தைத் தான் பொறுத்துள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தம் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்புவது நலம். பெரியவரே! அதோ பச்சைப் பசேலென்று தெரிகின்றனவே, அவை என்ன?

கிராமவாசி : தம்பி, அவை கிராமத்தின் வயல் கள். வா போய்ப் பார்க்கலாம்.

கோபாலன் : ஆ! என்ன அழகான காட்சி! பச்சைக் கம்பளத்தைப்போன்ற இந்தப் புற்றரையில் படுத்துத் தூங்கலாம் போலிருக்கிறது! ஆ! என்ன காற்று! இப்படிப்பட்ட குளிர்ந்த காற்றை நான் அனுபவித்ததே இல்லை! இதோ இந்தக் கிணற்றுத் தண்ணீர் குடிக்கப் பயன்படுமா?

கிராமவாசி : நன்றாகக் குடிக்கலாம். இதோ இருக்கும் தென்னந்தோப்பு என்னுடையதுதான். சில பனை மரங்களும் இருக்கின்றன. வேண்டியமட்டும் நீ இளநீர் குடிக்கலாம். பனங்காய்களும் வெட்டித் தருகிறேன்.

கோபாலன் : பெரியவரே, முதலில் இந்தக் கிணற்றில் இறங்கிக் கைகால்களைக் கழுவிக்கொள்வோம். பிறகு இளநீர் குடிக்கலாம்.

கிராமவாசி : சரி. அப்படியே செய்யலாம்.

கோபாலன் : ஆ! என்ன தெளிவான தண்ணீர்! கண்ணாடியைப்போல் இருக்கிறதே! குடிப்பதற்கு மிகவும் இனிப்பாக இருக்கிறதே! எங்கள் பட்டணத்துக் குழாய் நீர் இந்தக் கிணற்று நீருக்கு ஒரு சிறிதும் ஒப்பாக இராதே.

கிராமவாசி : தம்பி, அதோ பார், வயல்களில் நெற்கதிர்கள் சாய்ந்திருக்கும் காட்சியை! இப்போது அறுவடைக் காலமாகையால் குடியானவர்கள் எல்லோரும் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். அவர்கள் பாடுபட்டு உழுது பயிரிட்டதன் பலனை நெற்கதிர்கள் காட்டுகின்றன.

கோபாலன் : பயிரிடும் காலம் தவிர மற்றக் காலங்களில் கிராமவாசிகள் என்ன செய்கிறார்கள்?

கிராமவாசி : ஒன்றும் செய்வதில்லை. சிலர் மட்டும் ஏதாவது கூலிவேலை செய்யலாமென்று பட்டணங்களுக்குப் போய்விடுகிறார்கள்.

கோபாலன் : ஏன் அப்படிச் செய்யவேண்டும்? நூல் நூற்றல், கோழி வளர்த்தல், பாய் முடைதல், ஆடைநெய்தல் போன்ற சிறு குடிசைத் தொழில்களைச் செய்வது உங்களுக்கு இலாபகரமானதாக இருக்குமே. வீண்பொழுது போக்காமல் வாழ்க்கை நடத்தலாமே.

கிராமவாசி : தம்பி, உன் யோசனையை ஒப்புக் கொள்ளுகிறேன். நகரத்திலும் பெரும்பாலோர் வீண் பொழுது போக்குகிறார்களே! அதை நீ பார்த்ததில்லையா?

கோபாலன் : அப்படி நினைக்கக் கூடாது. நகரத்தில் வாணிபமும் கைத்தொழிலும் அதிகமாகையால் யாருக்கும் வீண்பொழுது போக்க நேரமே கிடையாது என்று கூறலாம். குறிப்பிட்ட காலத்தில் அவரவர்கள் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள். ஆனால் அங்குக் கிராமங்களைப்போல் நல்ல காற்று வசதியும் வீட்டு வசதியும் இல்லை என்று சொல்லலாம்.

கிராமவாசி : அதுமட்டுமா? நகரங்களில் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டவன் உயிரோடு வீடுதிரும்புவான் என்ற உறுதி இல்லையே! எங்குப் பார்த்தாலும் வண்டிகளின் நடமாட்டம். மக்களின் நெருக்கடி சகிக்க முடியவில்லை.

கோபாலன் : ஐயா! நகரத்தில் மட்டும் குற்றங் குறைகள் இல்லையென்று சொல்லமுடியுமா? இரண்டி

டங்களிலும் இன்ப துன்பங்கள் உண்டு. அவற்றில் உள்ள குறைபாடுகளை நீக்கி நலமாக வாழ்வதே நமது கடமையாகும். இவ்வளவு நேரம் கிராமத்தின் காட்சிகளைக் காட்டிய தங்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் அடிக்கடி இங்கு வந்து என்னால் ஆன சேவைகளைப் புரிகிறேன். நேரமாகிறது. நான் போய் வருகிறேன்.

பயிற்சி

பொருளறிக :

உறைவிடம்	ஒத்தாசை	சகிக்க	வாணிபம்
ஏது	காட்சி	முடைதல்	வியப்பு

கீழ்வரும் தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பச்சைப் பசேலென்று, மாடமாளிகை, சுறுசுறுப்பாக.

எதிர்ப்பதம் கூறுக :

- இன்பம், நெருக்கமான, முன்னேற்றம், தெளிவான.

விடை கூறுக :

1. கிராமத்தில் கோபாலன் கண்ட காட்சிகள் யாவை?
2. கிராமங்களில் தெருக்களின் அமைப்பு எப்படி இருக்கும்?
3. நகரத்துக்கும் கிராமத்துக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?

கட்டுரைப் பயிற்சி

1. நீ பார்த்த ஏதேனுமொரு கிராமத்தைப் பற்றிப் பத்து வரியில் ஒரு கட்டுரை எழுதுக.

2. கிராம வாழ்க்கை சிறந்ததா? நகர வாழ்க்கை சிறந்ததா? என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. கிராமத்தில் நடைபெறும் தொழில்களைப்பற்றிச் சுருக்கி எழுதுக.

இலக்கணப் பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை அமைத்து எழுதுக :

1. மாடுகள் வயலில்—
2. —பாடசாலைக்கு ஓடுகிறார்கள்.
3. புலி—கொன்றது.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக :

1. அகத்திய முனிவர் தமிழை வளர்த்தார்.
2. பசு பால் தரும்.
3. உன்னிடம் ஒரு பேனா இருக்கிறதா?

4. கொலம்பஸ்

உலகம் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று குணகோளார்த்தம்; மற்றொன்று குடகோளார்த்தம். குணகோளார்த்தத்தில்தான் நாம் வசிக்கின்றோம். இந்நிலப் பரப்புக்குத்தான் பழைய உலகம் என்று பெயர். இக் குணகோளார்த்தத்தில் வாழ்ந்து வந்தோர், உலகமே இத்துடன் சரி; வேறு ஒன்றும் இல்லை என்று எண்ணி வந்தனர். ஆனால் **கொலம்பஸ்** என்னும் அறிஞர் மேற்கில் வேறொரு

கண்டத்தைக் கண்டுபிடித்தார். அதனைப் புதிய உலகம் என்று மக்கள் அழைத்து வருகின்றனர். இப்புதிய உலகத்தில் வட அமெரிக்காக் கண்டமும் தென் அமெரிக்காக் கண்டமும் அடங்கும்.

கொலம்பஸ் தளராத ஊக்கமும், அஞ்சா நெஞ்சமும், எண்ணியதை எண்ணியபடி அடையவல்ல திண்மையும் படைத்தவர். 1447-இல் இத்தாலிய நாட்டின் சிறந்த துறைமுகப் பட்டினமாகிய ஜினேவாவில் கொலம்பஸ் அவதரித்தார். அவர் பெற்றோர்கள் செல்வர்கள் அல்லர். ஆயினும் அவர்களால் இயன்றவரையில் கொலம்பஸைச் செல்வமாகப் போற்றிவந்தனர். கொலம்பஸ் சிறுவனாக இருந்தபோதே நிலநூலைக் கற்பதில் மிக்க ஆர்வம் காட்டி வந்தார். மற்றும் தாம் பிறந்த ஊர் துறைமுகப் பட்டினமாக இருந்ததால் கப்பலோட்டிகள் பலருடன் அவருக்கு நெருங்கிய தொடர்பேற்பட்டது. பதினான்கு வயது நிரம்பும் முன்பே கப்பல் தொழிலில் ஈடுபட்டு அத் தொழிலை முறையாகக் கற்றுத் தேர்ந்து சிறந்த மாலுமியாக மாறினார். கப்பல் தலைவனுடைய மகளையும் மணந்துகொண்டார். இது அவருடைய பிற்கால வாழ்க்கைக்குத் துணையாக நின்றது.

அக்காலத்தில் மேலை நாடுகளில் வாழ்ந்து வந்தோர் கிழக்கு நோக்கிப் பிரயாணம் செய்து இந்தியாவை அடையும் வழியைக் கண்டு பிடித்திருந்தனர். உலகம் உருண்டை என்பதையும் உணர்ந்திருந்தமையால் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தால் இந்தியாவை உறுதியாக அடையலாம் என்று கொலம்பஸ் எண்ணினார். ஐரோப்பியர் அனைவரும்

இந்தியா செல்வமும் செழிப்பும் உடைய நாடு என்பதை உணர்ந்திருந்தனர். அதனல் அவர்கள் இந்தியாவை அடைய வழிகள் பலவற்றைக் காணும் கருத்துடனே இருந்துவந்தார்கள். நிலவழியாக வருதல் பலர்க்கும் பெருந்துன்பம் விளைவித்து வந்தமையினுல் கடல் மார்க்கமாக மேற்கு நோக்கிச் சென்று இந்தியாவை அடையும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற வேட்கை கொலம்பஸுக்குப் பிறந்தது. கொலம்பஸ் இரவும் பகலும் இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தார். ஆனல் அவர் ஆசையை நிறைவேற்றுவதில் ஆதரவு அளிப்பவர் ஒருவருமில்லை.

மேற்கு நோக்கிச் சென்ருல் இந்தியாவை அடையலாம். ஆனல் யாருக்கு மன உறுதி இருந்தது? மேலும் பண உதவியும் வேண்டியிருந்தது. கொலம்பஸ் மிகவும் ஏழை. இம்முயற்சியை மேற்கொள்ள வேண்டிய அவ்வளவு பணமும் அவரிடத்தில் இல்லையே! 'மன்மிருந்தால் மார்க்கமுண்டு' என்று சொல்லுவது பொய்யாகுமா? 1474-ஆம் ஆண்டில் போர்ச்சுக்கல் நாடு சென்று, அந்நாட்டு அரசனை யணுகித் தம் கருத்தினைத் தெரிவித்தார். அந்நாட்டில் பல்லாண்டுகள் தங்கியிருந்தார். இறுதியாக அரசன் உதவி செய்யான் என்பது தெரிந்தது. ஆனல் அவர் மனம் மட்டும் எதற்கும் சோர்வடைய வில்லை.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு ஸ்பெயின் நாடு சென்ருர். அந்நாட்டு அரசியைக் கண்டு தம் கருத்தைத் தெரிவித்தார். அரசி கொலம்பஸின் முயற்சியைப் பாராட்டினுள். ஆயினும் முதலில் பண உதவி

செய்ய இசையவில்லை. இறுதியாகத் தன் அணிகளை விற்றேனும் பொருளுதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்தாள். அரசியின் ஆதரவைக் கண்ட கொலம்ப ஸின் மனத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை யாரால் அளவிட்டுக் கூற முடியும்? அவள் கொடுத்த செல்வத்தைக் கொண்டு, **சாந்தமேரியா, பிண்டா** என்ற இரு

பெருங் கப்பல்களும், **நைனு** என்ற பெரிய படகும் வாங்கினார். 1492-ஆம் ஆண்டில் **பாலோஸ்** என்னும் துறைமுகப் பட்டினத்திலிருந்து கப்பல்கள் கிளம்பின. கொலம்பஸ் மட்டும் மிக்க உற்சாகத்துடன் அவைகளை ஓட்டிச் சென்றார். ஆனால் அவருடன் இருந்தவர்களும்,

அவரை வழியனுப்பியவர்களும் மனத்தில் கலக்கம் அடைந்தனர்.

கரையை விட்டுக் கப்பல்கள் காற்றின் வேகத் துடன் சென்றன. எங்குப் பார்த்தாலும் ஒரே நீல நிறக் கடல். கண்ணுக் கெட்டிய தூரம் வரை ஒரு பறவையையும் காணமுடியவில்லை. இங்ஙனம் பல நாட்கள் கடலில் கப்பலை ஓட்டிச் சென்றனர் ஆனால் கொலம்பஸுடன் இருந்த மாலுமிகள் சிறிது சிறிதாக மனத்தளர்வு அடைந்து வந்தனர். 'இனி நாம் பிறந்த நாட்டைக் காணப்பெறுவோமோ இல்லையோ' என்று எண்ணி எண்ணி ஏக்கமுற்றனர். மனத்தில் அச்சம் குடிகொண்டது. கொலம்பஸின் மேலிருந்த ஆசை வெறுப்பாக மாறியது. எண்ணித் துணியாமல் பெருந்துன்பக் கடலினிடை அகப்பட்டுக்கொண்டமை நினைந்து வருந்தினர்.

இந்த மனநோய் கொலம்பஸையும் பற்றியது. ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் உற்சாகத்துடன் இருந்தார். எல்லா மாலுமிகளையும் ஒருங்கு கூட்டி ஊக்கம் அளித்து வந்தார். "நாம் நம் முயற்சியில் வெற்றி பெற்றால் இந்தியாவுக்குப் புதிய வழி கண்டுபிடித்த பெருமை யாருக்குச் சேரும்? நமக்குத்தானே? நம்மைத்தான் இனிவரும் மக்கள் புகழ்ந்து பேசுவார்கள்; நீங்கள் மனக் கவலையடையாதீர்கள்; இதோ இந்தியாவை அடைந்துவிட்டோம்", என்று கூறித் தேற்றினர்.

இந்நிலையில் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும் காலம் வந்தது. ஒருநாள் மாலுமிகள் தம் கப்பலருகே பறவைகள் பறந்து செல்லுதலைக் கண்டார்கள்; பர

மானந்தம் கொண்டார்கள். பறவைகள் நடுக்கடலில் பறந்து செல்லா. நாடு அண்மையில்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். மேலும் சிறிது தூரம் சென்றனர். அன்று வெட்டி உலராத சில மரக் கொம்புகளைக் கண்டனர். இரவு நேரமாயிற்று. கரை யோரமாக வெளிச்சத்தைக் கண்டனர். கரையைச் சேர்வது திண்ணம் எனக்கொண்டு எப்போது பொழுது புலருமோ என எதிர்நோக்கி இருந்தனர்.

பொழுது விடிந்தது. அவர்கள் எதிரே ஒரு செழிப் பான நிலப் பகுதியைக் கண்டனர். அங்கு வாழும் மக்களும் நல்ல குணத்துடன் இருந்தனர். கொலம்பஸ் குழுவினர் தாங்கள் அடைந்த அந்தத் தீவிலே ஸ்பெ யின் நாட்டின் கொடியினை நாட்டி அதன்கீழ் நின்று எல்லோரும் வணங்கினர். மாலுமிகள் எல்லோரும் கரையடைந்ததை எண்ணி எண்ணிப் பெருங் களிப் படைந்தனர்.

அச்சமயம் கொலம்பஸுக்குத் தாம் கண்டுபிடித் தது புதிய உலகம் என்று தெரியாது. இந்தியாவைச் சேர்ந்த தீவு என்று எண்ணி அத்தீவுகளை இந்தியத் தீவு கள் என்றும், அந்நாட்டு மக்களை இந்தியர்கள் என்றும் அழைத்தார். பிற தீவுகளுக்குச் சென்று அவற்றை யெல்லாம் பார்வையிட்டார். அவருடன் வந்த எல்லா மாலுமிகளும் இன்பக் கடலில் ஆழ்ந்தனர்; துள்ளிக் குதித்தனர். வாழ்க்கையில் துன்பப்படாமல் இன்பம் வராது என்பதை அவர்கள் உணர்ந்து ஆடிப்பாடி, மகிழ்ந்தனர்.

நாமும் ஏதாகிலும் அரியகாரியத்தைச் செய்ய நினைத் தால் அதனைச் செய்வது முதலில் துன்பமாகத்தானிருக்

கும். அதற்காக நாம் மனச் சோர்வுகொண்டு அதனைக் கைவிடக் கூடாது. குன்றாத ஊக்கத்துடன் அதனை மேற்கொண்டால் நிச்சயமாகக் காரியம் கைகூடும். பிறகு நமக்குப் பேரின்பம் வரும். கொலம்பஸ் தளராத ஊக்கத்துடன் எதையும் பொருட்படுத்தாமல் சென்றதனால்தானே இன்று புதிய உலகத்தைக் கண்டுபிடித்தவர் என்று நாம் அவரைப் போற்றுகின்றோம்?

பயிற்சி

பொருளறிக :

அவதரித்தல்	குணம்	நிலநூல்
இறுதியாக	குன்றா	புலரும்
உறுதியாக	கோளார்த்தம்	மாலுமி
களிப்பு	தளராத	வேட்கை
குடம்	திண்மை	

கீழ்க்காணும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக :

திடீரென, எண்ணி எண்ணி, ஆடிப்பாடி.

விடை தருக :

1. புதிய உலகத்தைக் கண்டு பிடித்தவர் யார்? அவர் எங்கே பிறந்தார்?
2. அவர் இளமை வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. அவர் தம் எண்ணம் நிறைவேற என்ன செய்தார்?
4. புது உலகம் நெருங்கிவிட்டது என்பதை மாலுமிகள் எவ்வாறு அறிந்தனர்?
5. கொலம்பஸ் வாழ்க்கையால் நாம் அறிவது யாது?

இலக்கணப் பயிற்சி

அறுவகைப் பெயர்கள் :

1. ராமன், குயில், மரம்-பொருளைக் குறிக்கும்.
— பொருட் பெயர்.

2. சென்னை, தோட்டம், பள்ளிக்கூடம்-இடத்தைக் குறிக்கும்.
— இடப் பெயர்.

3. நாள், திங்கள், வாரம்-காலத்தைக் குறிக்கும்.
— காலப் பெயர்.

4. கண், குளம்பு, இலைகள்-உறுப்பைக் குறிக்கும்.
— சினைப் பெயர்.

5. அன்பு, இனிமை, தீமை-குணத்தைக் குறிக்கும்.
— பண்புப் பெயர்.

6. ஓடுதல், பாட்டு, உதவி-தொழிலைக் குறிக்கும்.
— தொழிற் பெயர்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களை எழுதி அவற்றின் வகையினையும் குறிப்பிடுக :

1. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.
2. மகாத்மா காந்தி அன்பு நிறைந்தவர்.
3. நேற்று என் அண்ணன் காலில் ஒரு முள் தைத்தது.
4. ஏழைக்கு உதவி செய்.
5. கற்றல் கேட்டல் கல்விக் கழகு.

5. பாட்டுக்கொரு புலவன்

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்ற கீதம் திக்கெட்டும் பரவும் இக்காலத்தில் பாரதியாரை அறியாத பள்ளிக்கூடப் பிள்ளைகள் யாரும் இரார். தாய்நாட்டுக்கு விடுதலை கோரிப் பாட்டுப் பாடி மக்களுக்குத் தேசிய உணர்ச்சி யளித்தவர் நம் பாரதியார். அல்லும் பகலும் தாய்நாட்டு விடுதலைக்காக உழைத்த மகாகவி பாரதியார். பைந்தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். உயிர்க்கவி, அமர கவி, புரட்சிக் கவி, சுதந்திரக் கவி, வரகவி என்று எப்படிப் பாராட்டினாலும் அஃது அவருக்குப் பொருத்தமாகவே இருக்கும்.

பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம் என்பது. பாரதியார் திருநெல்வேலிக் கடுத்த எட்டையபுரத்தில் கி. பி. 1882-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் நாளன்று பிறந்தார். அவர் தந்தையார் **சின்னசாமி ஐயர்**. தாயார் **இலட்சுமி அம்மாள்**. சின்னசாமி எட்டையபுரம் சமஸ்தானப் புலவராகத் தொண்டாற்றி வந்தார். பாரதியார் சிறுவயதிலேயே தம் தந்தையைப் போலவே கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் பாடிய பாடல்களைக் கேட்டு எட்டையபுரம் ஜமீன்தார் மிகவும் இன்பம் அடைவார். பாரதியாருடைய இளம் பருவத்திலேயே இலட்சுமியம்மாள் காலமானார். சின்னசாமி ஐயர், அன்னையின் பிரிவால் கலங்காதிருக்கும்படி பாரதியாரை மிகவும் அன்போடு வளர்த்து வந்தார்.

பாரதியார் சிறுவயதிலேயே ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த அறிவுடையவராக விளங்கினார். அவர்

ஆரம்பக் கல்வி பயின்றதும் திருநெல்வேலியில் உள்ள ஹிந்து கலாசாலையில் சேர்க்கப்பட்டார். ஆங்கு மெட்ரிகுலேஷன் வரையில் பயின்ருர். அதன் பிறகு பாரதி

யார் காசியில் உத்தியோகம் புரிந்து வந்த தம் மாமனின் ஆதரவில் அங்குள்ள மத்திய இந்துக் கல்லூரியில் படித்தார். அவரது நுண்ணறிவையும் கவிபாடும் திறமையையும் கண்ட ஆசிரியர்களும் நண்பர்களும் அவரைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர்கள்.

பள்ளிப் படிப்பில் பாரதியார் அவ்வளவாக நாட்டம் செலுத்தவில்லை. தாய் நாட்டுக்கும் தாய் மொழிக்

கும் சேவை புரிவதிலேயே அவர் விருப்பம் சென்றது. மலை, ஆறு, சோலை, வானம், கடல் இவற்றைக் கண்டு அவர் ஆனந்திப்பார். அவற்றின் இயற்கை எழில் புனைந்து கவிகள் பாடுவார். உரைநடை எழுதுவது போல மிக விரைவில் அழகிய கருத்தமைந்த பலபாடல் களைப் பாடுவார். அவருடைய கவிதைத் திறமையைக் கண்டே புலவர்கள் அவருக்குப் **பாரதி** என்னும் பட்டப் பெயரைச் சூட்டினார்கள்.

பாரதியாரின் அறிவுத் திறத்தைக் கண்ட எட்டைய புரம் ஜமீன்தார் அவரைத் தம் அரசவைக் கவிஞராக இருக்கும்படி வேண்டினார். அவர் விருப்பப்படியே எட்டையபுரம் அவைக்களப் புலவராகப் பாரதியார் சிறிது காலம் பணியாற்றி வந்தார். எனினும் அரண் மனை உத்தியோகம் பாரதியாருக்குப் பிடிக்கவில்லை. பின்னர் மதுரைச் சேதுபதி கலாசாலையில் சிறிதுகாலம் தமிழாசிரியராய்ப் பணியாற்றி அந்த வேலையையும் விட்டு விலகிக் கொண்டார்.

தேசப் பணியில் ஆர்வம்மிக்க பாரதியார், சென்னை சென்று **'சுதேசமித்திரன்'** துணையாசிரியராகத் தொண்டு புரிந்தார். அதற்குப் பிறகு **'இந்தியா'** என் னும் வாரப் பத்திரிகையின் ஆசிரியரானார். ஆங்கில ஆட்சியின் கொடுமைகளைப்பற்றி அதில் அடிக்கடிக் கட்டு ரைகள் தீட்டுவார். அவற்றைப் படித்துப் பார்த்த மக்க ளில் பலர் நாட்டு உணர்ச்சி மிக்கவர்களாக விளங்கினார் கள். பாரதியாரின் போக்கைக்கண்ட அரசாங்கத்தினர் அவர் மீது ஆத்திரங் கொண்டு அவருக்குப் பல தொல்லைகள் கொடுக்கலாயினர். 'இந்தியா' என்னும் பத்திரிகையை நடத்தக்கூடாது என்று தடையுத்தரவு

விதிக்கப்பட்டது. அப்பத்திரிகையின் உரிமையாளர் களும் கைது செய்யப்பட்டனர்.

பாரதியாரும் கைதுசெய்யப்படலாம் என அன்பர் கள் பலர் ஐயுறலாயினர். அவர் கைது செய்யப்பட்டால் தேசப் பணியும் தமிழ்த் தொண்டும் நாசமாகுமே என ஏங்கினார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பாரதியார் பிரெஞ்சுக்காரரின் ஆட்சியிலிருந்த புதுச் சேரியை அடைந்தார். புதுச்சேரி ஆங்கிலேய ஆட்சி யின் எல்லையை விட்டு நீங்கி இருந்ததால் பிரிட்டிஷ் அரசாங்கத்தினரால் அவரைக் கைது செய்ய முடிய வில்லை.

புதுச்சேரி பாரதியாருக்குப் புதிய ஊராக இருந்த தால் பல தொல்லைகள் ஏற்பட்டன. அரசியல் ஒற்றர் கள் அவருக்குக் கொடுத்த தொல்லைகளுக்கு அளவே இல்லை. அத்துடன் வறுமைப் பிணியும் அவருக்குத் துன்பம் கொடுத்தது. அந்தக் காலத்திலும் பாரதியார் சிறிதும் மனந்தளராமல் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் பல பாடல்களும் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டார்.

பாரதியாரின் புலமையும் தேசபக்தியும் கண்டு புதுச்சேரியில் அரவிந்த யோகியும், வ. வெ. சுப்பிர மணிய ஐயரும் அவருக்கு நண்பராயினர். துன்பத்தி லும் இன்பத்திலும் அவர்கள் இருவரும் நம் கவிஞருக்கு உற்ற துணைவர்களாக இருந்தனர். அங்குப் பாரதி யார் அரவிந்தரின் உதவியால் 'கர்ம யோகி' என்னும் பத்திரிகையை நடத்திவந்தார். அங்கிருந்தே சென்னை யில் சுதேசமித்திரனுக்குக் கட்டுரைகள், கவிதைகள் எழுதிவந்தார். அதன் பொருட்டுச் சுதேசமித்திரனை

நடத்தி வந்த அரங்கசாமி ஐயங்கார் பாரதியாருக்கு மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபா அனுப்பி உதவினார்.

சொந்த நாட்டை விட்டுப் புதுச்சேரியில் எத்தனை நாட்களுக்குக் காலம் கழிப்பது! பாரதியாருக்குப் புதுவை வாழ்க்கையும் கசந்தது. 1920-ஆம் ஆண்டில் அவர் மீண்டும் சென்னைக்குப் புறப்பட்டார். சுதேசமித்திரன் துணையாசிரியராகவே மறுபடியும் பதவி ஏற்று அப் பத்திரிகையைச் சிறந்த முறையில் நடத்திவந்தார். அவர் சென்னையில் திருவல்லிக்கேணியில் உள்ள துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் வாழ்ந்து வந்தார்.

கவிஞர் பாரதியார் அருங்குணங்கள் பல அமையப்பெற்றவர். ஜாதி பேதம் என்பதை அவரிடம் சிறிதும் காணமுடியாது. சுதந்திரமான வாழ்க்கையிலேயே அவருக்குப் பற்று உண்டு. அடிமை வாழ்வை அறவே வெறுப்பார். அவரிடத்தில் ஆடம்பரம் எதுவும் இல்லை. எல்லோரும் அவரிடம் எளிதாகப் பழகுவார்கள். ஏழை எளியவர்கட்குத் தம்மால் இயன்ற உதவிகளை எப்போதும் செய்து வந்தார். தேசிய உணர்ச்சியில் ஒப்புயர்வில்லாத கவிஞராய் விளங்கினார். அவர் பாடல்கள் சொல்வளமும் பொருள்வளமும் உடையனவாகத் திகழ்ந்தன. அவர் எத்தகைய துன்பம்வரினும் உள்ளம் கலங்காதவர். இந்தியத் தந்தை மகாத்மா காந்தியடிகளிடம் அவர் அளவற்ற அன்பு பூண்டிருந்தார்.

இத்தகைய அரும் பெரும் கவிஞர் சில நாள் உடல் நலம் இன்றி 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் தம் இளமைப் பருவத்திலேயே இவ்வுலக வாழ்வை நீத்தார். பாரதியார் இறக்கும்போது

அவருக்கு வயது முப்பத்தொன்பதே. அவர் இன்னும் உயிருடன இருந்தால் விடுதலைபெற்ற நம் பாரத நாட்டைக்கண்டு மனம் பூரிப்படைவார் அல்லவா?

பாரதியாரின் தமிழ்த்தொண்டையும் தேசப் பணியையும் பாராட்டித் தமிழ் மக்கள் அவருக்கு எட்டையபுரத்தில் **பாரதி நினைவுக் கட்டடம்** என்று ஒரு கட்டடத்தை அழகிய முறையில் அமைத்துள்ளனர். அக் கட்டடம் மிகவும் உன்னதமாக இருந்து பாரதியாரின் பெருமையை நாட்டு மக்களுக்கு நினைவூட்டுகின்றது. மாணவ மணிகளே! நீங்களும் பாரதியாரின் அருங் குணங்களையும் நெறி முறைகளையும் பின்பற்றி நாட்டுக்கு நலம் பல புரிவீர்களாக.

பயிற்சி

பொருளறிக:

அமரகவி	எழில்	கசந்தது
அரசவைக் கவிஞர்	ஐயம்	கீதம்
அவைக்களம்	ஒற்றர்தன்	கைது

V

திக்கு	நாட்டம்	பணியாற்றி
திங்கள்	நெறிமுறை	புரட்சிக்கவி
தேசியம்	நுண்ணறிவு	புனைந்து

கீழ்க்காணும் தொடர்மொழிகளை வாக்கியங்களில் அமைக்க;

அல்லும் பகலும், துன்பத்திலும் இன்பத்திலும், ஏழை எளியவர், நெறிமுறைகள்.

விடை கூறுக :

1. "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்று பாடியவர் யார்?
2. பாரதியார் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறுக.
3. 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பது எப்படிப் பாரதியாரிடம் உண்மையாயிற்று?
4. பாரதியார் சிறந்த தேசபக்தர் என்று எப்படிப் புலப்படுகின்றது?
5. பாரதியார் புதுவைக்குச் செல்லக் காரணம் என்ன?
6. புதுவையில் பாரதியாருக்கு உதவி செய்தவர்கள் யாவர்?
7. பாரதியார் அருங்குணங்கள் யாவை?

தெரிந்து கொள் :

பாரதியார் பாடல்களின் உரிமையைத் தற்போது அரசாங்கத்தாரே வாங்கிக்கொண்டு அவர் கவிதைக்குப் பெருமை அளித்திருக்கின்றனர்.

இலக்கணப் பயிற்சி

ல, ள, ன, ண இவைகளின் வேறுபாட்டைத் தெரிந்து கொள்க.

1. மாடு புல் தின்னும்.
2. கிளி ஓர் அழகான புள்.
3. உன் மனம் எதை நாடுகிறது?
4. முல்லை மணம் வீசுகிறது.

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுதுக:

1. ——இரும்பைத் தேய்க்க உதவும். (அறம். அரம்)
2. குரங்கு மரத்தைவிட்டுக் கீழே——(இரங்கிற்று. இறங்கிற்று)
3. அவன் கூலிக்கு—செய்தான். (வேலை, வேளை)
4. அவன் ——சொற்கள் மிகவும் பொருத்தமானவை. (கூறிய, கூரிய)
5. ஆசிரியர் பாட்டுக்கு——கூறினார். (உரை, உறை)

கீழ்வரும் சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

அரை, அறை	குளம், குலம்
ஒலி, ஒளி	கூரை, கூறை
காலை, காளை	நிலம், நீளம்

6. சிறிய உயிர்களின் அரிய செயல்கள்

மனிதன் ஆறறிவுடையவன். ஒவ்வொரு மனிதனும் தான் அரிய செயல்களைச் செய்து பெரும் புகழும் பெருவாழ்வும் அடையவேண்டும் என்று விரும்புகிறான். சிலர் ஓயாது உழைத்து அரிய செயல்களைச் செய்வார்கள்; சிலர் வாயால் கூறுவார்கள்; ஆனால் செய்கையில் முடியாமல் திகைப்பார்கள். மனிதனைவிட இழிந்த உயிர்களாகிய குருவி, எறும்பு, தேனீ, நாங்கூழ்ப்புழு, சிலந்தி முதலியவற்றின் செயல்கள் மனிதராலும் செய்ய முடியாதபடி உன்னதமாக விளங்குகின்றன. தூக்கணாங் குருவிகள் மரக்கிளைகளில் தொங்கவிட்டிருக்கும் அழகிய கூடுகளைப் போன்ற

கூடொன்று நம்மால் செய்ய இயலுமா? இயலாதே! குளவிகள் அரக்குக் கூடுகளை அமைப்பதுபோல் நம்மால் அமைக்க முடியுமா? முடியாதே! சிலந்தி எண்ணிய வளவில் துண்ணெனப் பின்னி முடிக்கும் வலையொன்று நம்மால் இயற்றலாகுமா? ஆகாதே! தேனீக்களின் வனப்பு மிக்க கூட்டைப்போல நம்மால் ஒரு கூடு கட்டமுடியுமா? முடியாதே!

தேன் என்னும் போதே நம் நாக்கில் நீர் சுரக்கிறது. இவ்வினிய தேனைத் திரட்டும் உயிர்கள் சிறிய ஈக்களே அல்லவா? தேனீக்களில் நான்கு இனங்கள் உண்டு. அவை கொம்புத்தேனீ, கொசுத்தேனீ, மலைத் தேனீ, அடுக்குத்தேனீ என்பவை. தேனீக்களின் கூட்டை ஓர் அரசாங்கம் என்றே சொல்லலாம். ஒவ்வொரு கூட்டிலும் ஒரு பெண் ஈ இருக்கும். அதுதான் ராணி ஆகும். வேலைக்கார ஈக்கள் மலர்களில் உள்ள தேனைத் திரட்டிக் கூட்டிற்குள் கொண்டுவந்து சேர்க்கும். சில ஈக்கள் கூட்டில் உள்ள ஈக் குழவிகளை இனிய மதுவருந்தச் செய்து சீராட்டி வளர்க்கும். சில ஈக்கள் தேன் கூட்டையும் அதில் அமைந்துள்ள சிற்றறைகளையும் பழுது பார்க்கும். சிற்றுயிர்களாகிய இவற்றின் ஒற்றுமைதான் என்னே! வேலைக்கார ஈக்களில் ஒன்று சோம்பித்திரியின் ஈயரசி அதனைத் தண்டித்துக் கூட்டை விட்டே வெளியில் ஓட்டிவிடும். ஒற்றுமையும் உழைப்பும் உடையவரே இன்னல் இன்றி இன்பமாக வாழ்வார் என்பதை ஈக்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

நாங்கூழ்ப் புழுவை நாம் அசட்டை செய்கிறோம். ஆனால் அது செய்யும் அரிய சேவையை நாம் ஒரு

நாளும் மறக்கமுடியாது. இச்சிற்றுயிர் தன் மெல்லிய உடலால் மண்ணைக் கிளறி மேல்மண் கீழ்மண்ணுக வும், கீழ்மண் மேல்மண்ணுகவும் செய்து காற்றை உட் செலுத்திச் செடியைச் செழிப்புடன் வளரச்செய்கிறது. மண்ணை உண்டு மண்ணைக் காக்கும் இச்சிறிய உயி ரின் மாண்புதான் என்னே! இதனுலன்ரே நாங்கூழ்ப் புழுவை '**உழவனின் நண்பன்**' என்று அறிஞர்கள் கூறுகிருர்கள். இதிலிருந்து பெரியோர்கள் தந்நலம் பாராமல் பிறர் நலத்துக்காகவே உழைப்பார்கள் என்னும் நீதி நமக்குப் புலனுகிறது.



இனிச் சிலந்தியின் அரிய செயல்களையும் அஃது உணவின் பொருட்டுக் கையாளும் தந்திர முறைகளை யும் நோக்குவோம். சிலந்தி வானத்தில் பறக்கும் பூச்சிகளை வலைகட்டிப் பிடிக்கும் வேடன் என்றே கூற லாம். அது தன் வலையை வீட்டின் மூலை முடுக்குகளி லும், செடிகொடிகளிலும், மரக்கிளைகளிலும் கட்டுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிலந்தி தன்னிடத்திலிருந்து உண்டாகும் நூலால் வலைகட்டி அவ்வலையின் நடுவே

மறைந்திருக்கும். ஏதேனும் ஒரு பூச்சி தன் வலையில் வந்து சிக்கிக் கொள்ளின், உடனே அதன் மேல் பாய்ந்து தன் மெல்லிய நூலால் அதைச் சுற்றிச் சுற்றிக் கட்டிவிடும். பிறகு செந்நீரை உறிஞ்சி அப்பூச்சி யைக் கொல்லும். பெரிய பூச்சிகள் வலையில் வந்து படின் சிலந்தி என்ன செய்யும் தெரியுமா? தன் வலை பழுதுபடும் என்று அஞ்சி அப்பூச்சி சிக்கிய இழைகளை அசைத்து அதனை வெளியே விடுவிக்கும். சிலந்தியிடம் ஆச்சரியப்படத்தக்க ஒரு குணம் உண்டு. அது தன் இனத்தைச் சார்ந்த வேறொரு சிலந்தி தன் வலையில் சிக் கிக்கொண்டால் அதைக் கொல்வதில்லை; தன் காலால் அது உட்கார்ந்திருக்கும் நூலை அசைத்து வெளியேற்ற முயலும். அந்த வேற்றுச சிலந்தி தன் வலையை விட்டு நீங்காவிடின் அது தன்னுடன் போர் செய்ய வந்திருப்ப தாகக கருதும். இரண்டும் போர் செய்யும். போரில் தோல்வியடைந்த சிலந்தி வாழ விரும்பாமல் உயிர் விடும். 'மான மழிந்தபின் வாழாமை முன் இனிதே' என்பதன் கருத்தை இச்சிற்றுயிர்களும் பின்பற்றி நடப் பது நமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகிற தல்லவா?

எறும்புகள் பார்வைக்குச் சிறியனவாக இருப்பி னும் அவற்றின் அறிவும் செயலும் நமக்கு வியப்பை அளிக்கும். வரிசை வரிசையாகத் தலைவன் பின்னே அணிவகுத்துச் செல்லும் போர்வீரர்களைப் போன்று எறும்புகள், சாரைசாரையாக ஊரும் காட்சியை என் னென்பது! சோம்பல் என்பதே எறும்புகளிடம் சிறிதும் காண முடியாது. தம் உடல் அளவினும் பல நூறு மடங்கு பெரிய உணவுப் பொருள்களையும் அவை ஒற்று

மையாகக் கவ்விப் பற்றித் தம் புற்றில் கொண்டு சேர்க்கும் செயலைக் கண்டு யார்தாம் வியப்புறுர்? தின்பண்டங்களை எறும்புகளின் வாயில்படாமல் எவ்விடத்தில் ஒளித்து வைப்பினும் அங்கும் இத்தின்பண்டத் திருடர்கள் எப்படியோ வந்து நமது தின்பண்டத்தைக் கொள்ளைகொண்டு போவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். மனிதர்களில் சிலர் தம் கையிலுண்டானபோது செல்வத்தைக் கண்டபடி செலவழித்துப் பிற்கால வாழ்வில் பொருள் முட்டுப்பாட்டால் துன்பம் அடைகின்றனர். அங்ஙனமில்லாமல் எறும்புகள் கோடைக்காலமெல்லாம் ஓயாது உழைத்துச் சேர்த்த உணவுப் பொருள்களை மாரிக்காலத்தில் உறவினரோடு உண்டு களிக்கும்.

மனிதர்களில் பலர் தமக்கு ஏதாவது ஒரு பொருள் அகப்படின் அதனைப் பிறர்க்குக் காட்டாமல் தாமே அனுபவிப்பர். எறும்புகளில் ஒன்றுக்குத் தரையில் ஒரு சிறிது உணவுப் பொருள் தென்பட்டாலும், அது தன் இனத்தினரைத் திரள்திரளாக அழைத்து வந்து உண்ணும்; எஞ்சிய உணவுப் பொருளை ஒவ்வொரு எறும்பும் தன் வாயில் கவ்விக்கொண்டு புற்றில் கொண்டுபோய்ச் சேர்க்கும். சில எறும்புகள் ஒளியைக் கொடுக்கும் மின்மினிப் பூச்சிகளைப் போன்ற உயிர்களைத் தம் புற்றில் வைத்து உணவு கொடுத்துக் காப்பாற்றுகின்றனவாம். ஒருவகை எறும்புகள் தானியங்களைப் பயிரிட்டுப் பயன் பெறுகின்றனவாம். மனித சமூகத்தில் காணப்படுவது போலவே எறும்புகளும் தமக்குள் தலைவனை ஏற்படுத்தித் தம் தலைவன் ஆணைப்படியே எல்லாக் காரியங்களையும் நடத்தி அமைதியாக வாழ்கின்றன என்று அறி

ஞர்கள் கூறுகிறார்கள். எறும்புகளைப் பார்க்கும் ஒவ்வொரு மனிதனும் சோம்பலை ஒழித்துச் சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமென்று உறுதிகொள்வது நலம்.

பயிற்சி

பொருளறிக :

அவம்	குழவி	திகைத்தல்
ஆணை	சீராட்டி	மாரிக்காலம்
ஊர்தல்	சுரத்தல்	மாண்பு
களித்தல்	திரட்டும்	முட்டுப்பாடு

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்மொழிகளை அமைத்து வாக்கியங்களை எழுதுக :

பேரும் புகழும், ஊரும் பேரும், சுற்றிச் சுற்றி, வரிசை வரிசையாக, சுறுசுறுப்பு, தெரிந்தும் தெரியாமலும்.

விடை கூறுக :

1. தேனீக்கள் தேனைச் சேகரிக்கும் முறை யாது?
2. "உழவனின் நண்பன்" என்று எதற்குப் பெயர்? ஏன்?
3. சிலந்தியிடத்தில் சிறப்பாகக் காணப்படும் குணம் என்ன?
4. "தின்பண்டங்களின் திருடன்" என்று எதற்குப் பெயர்? ஏன் அதற்கு அப்பெயர் வந்தது?
5. இப் பாடத்திலிருந்து நீங்கள் அறிந்துகொள்வன யாவை?

இலக்கணப் பயிற்சி

சீதை, மாடு, அரசன், கழுகு, கிளி, உணவு, ஒருவன், மகன், தருமன், விரல், சிறுமி, நாற்காலி, முருகன்—இ

பெயர்களில் பகுத்தறிவு உள்ளனவற்றையும், பகுத்தறிவு இல்லாதனவற்றையும் தனித்தனியே எடுத்து எழுது.

பகுத்தறிவு உள்ளவை—உயர்திணை
பகுத்தறிவு இல்லாதவை—அஃறிணை

உனக்குத் தெரிந்த ஐந்து உயர்திணைப் பெயர்ச் சொற்களையும் ஐந்து அஃறிணைப் பெயர்ச் சொற்களையும் குறிப்பிடுக.

தகப்பனார், அரசன் - ஆணைக் குறிக்கும் பெயர்கள். —ஆண்பால்

தாயார், அரசி - பெண்ணைக் குறிக்கும் பெயர்கள். —பெண்பால்

மக்கள், நகரத்தார் - பலரைக் குறிக்கும் பெயர்கள். —பலர்பால்

குருவி, பேனா - ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்கள். —ஒன்றன்பால்

குருவிகள், பேனாக்கள் - பல பொருளைக் குறிக்கும் பெயர்கள். —பலவின்பால்

ஆண்பால் கூறுக:

குருடி, தயிர்க்காரி, மாணவி, அவள், தங்கை.

பெண்பால் கூறுக:

அரசன், களிறு, குமாரன், மாமன், இவன்.

7. கப்பல் ஓட்டிய தமிழன்

இன்று நமது நாடு சுதந்திரம் பெற்ற நாடாக விளங்கு கின்றது. நம்நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் பாடுபட்டோர் பலராவர். அவர்கள் அல்லும் பகலும் நாட்டு நலத்துக்காகவே தம் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் தியாகம் செய்தனர். அன்னாரின் உழைப்பினாலேயே இன்று நாம் சுதந்திரம் பெற்ற மக்க ளாகத் திகழ்கிறோம். தாய்நாட்டுக்காக உழைத்த தேசிய வீரர்களுள் **வ. உ. சிதம்பரம் பிள்ளை** அவர்களும் ஒருவராவர்.

சிதம்பரம் பிள்ளை கி. பி. 1873-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாளில் தூத்துக்குடிக்கு அடுத்த ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தகப்பனார் பெயர் **உலகநாதப் பிள்ளை** என்பது. அவர் இளமைப் பருவத்திலேயே தமிழிலும், ஆங்கிலத் திலும் சிறந்த புலமை பெற்றார். பின்னர் நீதிக்கலையில் தேர்ச்சி அடைந்து ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞ ராகப் பணியாற்றி வந்தார்.

சிதம்பரம் பிள்ளை மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவராக விளங்கினார். அவர் பணக்காரர் ஏழை என்று பாராமல் எல்லோரிடமும் அன்புடன் பழகி வந்தார். ஏழைகளுக்குத் தம்மால் இயன்ற உதவி களைப் புரிந்தார்.

அவர் தமது வழக்கறிஞர் தொழிலைச் சிறிதும் குற்றம் குறைவில்லாமல் நடத்தி வந்தார். எனினும், வழக்கறிஞர் வேலையிலேயே அவர் தம் வருமானத்தை வளர்க்க நினைக்கவில்லை. தேச சேவை புரிவதிலேயே அவருக்கு அவா ஏற்பட்டது.

ஐரோப்பியர் கப்பல் வாணிபத்தால் கொள்ளை இலாபம் பெறுவதைச் சிதம்பரம்பிள்ளை கண்டார். அந்த இலாபம் முழுவதும் ஐரோப்பியருக்கே கிடைப்பதைக் கண்டு வருந்தினார். நம் நாட்டு மக்களும் மூலதனம்

வைத்துக் கப்பல் வாணிபம் நடத்தி வளமுற வாழ வேண்டுமென்று விரும்பினார். தமது விடாமுயற்சியினால் செல்வர் பலரின் கூட்டுறவு பெற்று விரைவில் "**சுதேசிக் கப்பல் கம்பெனி**" என்று ஒரு கம்பெனியைத்

தொடங்கி நடத்திஞர். தூத்துக்குடி ஒரு சிறந்த துறை முகப்பட்டினமாகையால் இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையே ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் சிதம்பரம் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கம்பெனி மூல மாகவே பெரிதும் நடைபெற்று வந்தன. சிதம்பரம் பிள்ளையின் செல்வாக்கைக் கண்ட ஐரோப்பியர் பொருமை கொண்டு, "எங்களுடன் போட்டி போட வேண்டாம். உங்கள் கப்பல் வியாபாரத்தை நிறுத்திக் கொண்டால் இலட்சம் ரூபாய் தருகிறோம்," என்று கூறி னர். பிள்ளை அவர்கள் அதற்கு ஒரு சிறிதும் இணங்க வில்லை. அதனல் ஐரோப்பிய வர்த்தகர்கள் அவருக்குச் சில இடையூறுகள் புரியலானர்கள். பிள்ளையவர்கள் எதற்கும் அஞ்சாமல் வாணிபத்தைச் சீரிய முறையில் நடத்தி வந்தார். அவர் செலுத்திய இரண்டு கப்பல் களில் ஒன்றின் பெயர் "**லாவோ**" மற்றென்றின் பெயர் "**காலியா**".

பிள்ளையவர்கள் நம் நாடு அடிமைத் தளையிலிருந்து நீங்கி உரிமை பெறவேண்டும் என்று விரும்பினர். திலகர் போன்ற தேசத் தலைவர்களின் வழியைப் பின் பற்றித் தேசத்துக்கு உழைக்கலானர். பிரிட்டிஷ் ஆட்சி யாளரின் கொடுமைகளை மக்களுக்கு உணர்த்தவேண்டு மென்று **சுப்பிரமணிய சிவா** என்னும் தேச பக்தரு டன் சேர்ந்து ஆங்காங்கே சொற்பொழிவாற்றினர். அது கேட்டு மக்கள் அரசாங்கத்தாரை வெறுக்கத் தொடங்கி ஞர்கள். சிதம்பரம் பிள்ளை தம் வழக்கறிஞர் தொழிலை யும் கைவிட்டுக் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து நாட் டின் விடுதலைக்கான பிரசாரங்களைச் செய்து வந்தார். மக்கள் அந்நிய நாட்டுப் பொருள்களை வாங்காமல்

சுதேசப் பொருள்களையே வாங்கவேண்டும் என்று கூறினர். அவர் பேச்சைக் கேட்டுத் தேசாபிமானி களில் பலர் மேனாட்டுத் துணிகளைத் தீக்கிரையாக்கினர்.

சிதம்பரம் பிள்ளை மக்களின் தேசிய உணர்ச்சியை வளர்ப்பதற்காகத் திருநெல்வேலியில் **தேசாபிமான சங்கம்** என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். தூத்துக் குடியில் ஐரோப்பிய முதலாளிகள் நடத்திய பஞ்சாலை களில் தொழிலாளர்கள் குறைந்த கூலி பெற்று வருந்தி னர்கள். அது கண்ட சிதம்பரம் பிள்ளை, அவர்களுக்குப் போதுமான கூலி கொடுக்குமாறு ஆலை முதலாளிக ளிடம் போராடினர். அவர்கள் அவர் வேண்டுகோளுக் குச் செவி சாய்க்கவில்லை. அதனல் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தில் பிழைப்புக்கு வழியின்றித் தொழிலாளர் திகைத்தனர். நம் பிள்ளையவர்கள் செல்வர் பலரிடம் நன்கொடை வாங்கி அத்துன்பத்தை நீக்கினர்.

1908-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி காங்கிரஸ் மகா சபையின் தலைவர்களில் ஒருவரான **விபின சந்திர பாலர்** என்பவர் விடுதலை ஆனர். அவர் விடுதலையை நாடெங்கும் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றன. அதனல் அரசாங்கத்தார் பொதுக் கூட்டம், ஊர்வலம் போன்ற எதுவும் நடத்தக் கூடா தெனத் தடை உத்தரவு போட்டுவிட்டார்கள். ஆனல் பிள்ளை அவர்கள் அந்தத் தடையையும் மீறிப் பொதுக் கூட்டத்தில் வீர முழக்கம் செய்தார். திருநெல் வேலி ஜில்லா முழுவதும் சிதம்பரம் பிள்ளையும் சிவா 'வும் நிறைந்த செல்வாக்கு உடையவர்களாக இருந்த னர். அதனல் வெள்ளையர் ஆட்சியின் அமைதிக்குப் பங்கம் விளையும் என்று கருதிய ஜில்லாக் கலெக்டர்,

அவர்கள் இருவரும் ஜில்லாவை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிட்டார். அந்த உத்தரவையும் இருவரும் மறுத்தனர். அதனால் சிவாவும் சிதம்பரனாரும் கைது செய்யப்பட்டார்கள். ஜில்லா நீதிபதி சிதம்பரம் பிள்ளை அவர்கள் மீது பல குற்றங்களைச் சுமத்தி இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை அளித்தார்.

உயர்நீதி மன்றத்தால் சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிறைத்தண்டனை ஏழு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. சிறையில் நம் பிள்ளையவர்கள் பெற்ற தொல்லைகளுக்கு அளவே இல்லை. சிறையில் அவர் செக்கும் இழுத்தார்; உலக்கையால் நெல்லும் குத்தினார். எனினும் அவர் மனம் வருந்தாமல் சிறையில் கிடைத்த சிறிது ஓய்வு நேரங்களில் தமிழ் நூல் ஆராய்ச்சி செய்து வந்தார். இத்தகைய தியாகியை இந்தியா என்றும் மறக்க முடியுமா? 1912-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சிதம்பரனார் சிறையிலிருந்து விடுதலை பெற்றார்.

சிறையிலிருந்து வெளிவந்த சில நாட்களில் பிள்ளை அவர்கள் வறுமையினாலும் துன்பப்பட நேர்ந்தது. பிள்ளையவர்கள் வறுமையிலும் செம்மை யுடையவராய் இருந்தார். தேசத்தின் திலகம் போன்ற சிதம்பரம் பிள்ளை சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு 1936-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

மாணவர்களே! நீங்களும் சிதம்பரம் பிள்ளை அவர்களைப் போலவே தேசப்பற்றும், மொழிப்பற்றும் உடையவர்களாக நாட்டுக்கு நன்மை புரிந்து வாழ்வீர்களாக.

பயிற்சி

பொருளறிக :

அவா	சிறிய	பங்கம்
அன்னார்	செவிசாய்த்தல்	பிரசாரம்
அடிமைத்தளை	தியாகி	மூலதனம்
ஆதிக்கம்	தேசாபிமானம்	வளமுற
இடையூறுகள்	நீதிக்கலை	வழக்கறிஞர்

இத்தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பணியாற்றி, இடையூறுகள், இணங்கவில்லை, வளமுற, குற்றங்குறைகள்.

விடை கூறுக:

1. சிதம்பரம் பிள்ளை ஏன் "கப்பலோட்டிய தமிழன்" என்று சிறப்பித்துப் பேசப்படுகிறார்?

2. பிள்ளையவர்களின் செல்வாக்கைக் கண்ட ஐரோப்பியர் என்ன செய்தனர்?

3. வ. உ. சி. செலுத்திய இரண்டு கப்பல்களின் பெயர்கள் என்ன?

4. சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிறைப்படக் காரணம் யாது?

5. பிள்ளையவர்கள் சிறையில் செய்த வேலைகள் எவை?

6. இவருடன் உழைத்த தேசபக்தர் யார்?

7. வ. உ. சி.யின் தேச சேவையைப்பற்றிச் சுருக்கமாக எழுதுக.

8. பிள்ளையவர்களின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணப் பயிற்சி

பன்மை கூறுக:

கல், பா, பூ, குளம், அது.

ஒருமை கூறுக:

அவை, நாங்கள், விற்கள், முட்கள், அன்னையார்.

நான், யான், நாம், நாங்கள் —தன்மைப் பெயர்கள்
நீ, நீர், நீங்கள், நீவிர் —முன்னிலைப் பெயர்கள்
அவன், அவள், அது, அவை —படர்க்கைப் பெயர்கள்

கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்து எழுதுக:

1. கண்ணன்———ஆசிரியரைக் கண்டு வணங்கினான்.
2. ———நன்றாகப் படித்தால் பரீட்சையில் வெற்றி பெறுவாய்.
3. ———பையைத் தேடுகிறான்.
4. ——— பள்ளிக்கூடம் போனோம்.
5. நீயும்———கோயிலுக்குச் சென்றீர்களா?

8. தம்பி செய்த தந்திரம்

முன்னொரு காலத்தில் சோமு என்றொரு மாண வன் இருந்தான். அவனுக்கு இலக்கணப் பாடம் என்றாலே பிடிக்காது. இலக்கணம் நடக்கும் வகுப்புகளில் உபாத்தியாயரிடம் சொல்லாமலே வீட்டுக்கு ஓடிவிடுவான். இலக்கணத்தில் உயிரும் மெய்யும் கற்றுக் கொள்வதற்குள் அவனுக்கு உயிரும் மெய்யும் போய் விடும்போலிருக்கும். அவனை வகுப்பில் உபாத்தியா யர் ஏதாவது வாக்கியத்துக்கு எழுவாய்ப் பயனிலை கேட்டால் பேசாமல் எழுந்திருப்பானே தவிர ஒன்றும் பதில் சொல்லமாட்டான். அதனால் ஆசிரியர் அவனை, "சோமு, நீ எழுவாய்; ஆனால் ஒன்றுக்கும் பயனிலை," என்று கேலி செய்வார்.

வீட்டிலும் சோமு இலக்கணப் புத்தகத்தைத் தொடுவதே இல்லை. எப்போதாவது ஒரு தடவை எடுத்தாலும் படித்துக் கொண்டே உறங்கி விடுவான். அவனுக்கு முத்து என்னும் ஒரு தம்பி இருந்தான். அவன் சிறிய பையன். இலக்கணப் புத்தகத்தை எடுத்தால்தான் தன் அண்ணனுக்குத் தூக்கம் வரும் போலும் என்று அவன் நினைத்துக் கொண்டான். தூங்க வைக்கும் சக்தி அந்தப் புத்தகத்தில் இருக்கிற தென்று எண்ணி அவன் மிகவும் ஆச்சரியப்பட்டான். யாருக்காவது நித்திரை வராவிட்டால் அதை அவர் அருகில் வைத்தால் தூங்கிவிடச் செய்யலாம் என்று எண்ணினான்.

முத்துவுக்குப் பூம்பாவை என்றொரு தங்கையுண்டு. அவள் ஒரு கைக்குழந்தை. அவள் மிகவும் செல்வ

மாக வளர்ந்து வந்தாள். பூம்பாவை ஒருநாள் வயிற்று வலியால் இரவு தூங்காமல் அழுது தொந்தரவு செய்தாள். வீட்டில் பெற்றோர்கள் அக் குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பெரிதும் முயன்றார்கள். ஒன்றும் பயனில்லை. தாயார் தாலாட்டுப் பாடினாள். அப்போதும் பூம்பாவை தூங்கவில்லை. கதை சொல்லிப் பார்த்தாள்; பயனில்லை. தகப்பனார் வானொலியைப் பாடவைத்தார். அப்போதும் பூம்பாவை தூங்கவே இல்லை. வீடடில் புழுக்கமாக இருக்கும் என்று நினைத்து அவளை மாடியில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தார்கள். பூம்பாவை மேலும் மேலும் அழ ஆரம்பித்தாளே தவிர ஓய்ந்தபாடில்லை. பெற்றோர்கள் ஒன்றும் தோன்றாமல் திகைத்தார்கள்.

பெற்றோரின் துன்பத்தைக் கண்ட முத்து சும்மா இருப்பானா? அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. உடனே அவன் தன் அண்ணன் சோமுவின் படிப்பறைக்கு ஓடினான். சோமு அப்பொழுதுதான் இலக்கணப் புத்தகத்தைக் கையில் பிடித்துத் தூங்கிக்கொண்டிருந்தான். முத்து சோமுவின் கையிலிருந்த அந்த இலக்கணப் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு மாடிக்கு ஓடினான். சோமுவும் திடுக்கிட்டெழுந்து அவன் பின்னே ஓடினான்.

முத்து என்ன செய்தான் தெரியுமா? அதைப் பூம்பாவையின் தலையணைக்குக் கீழ்வைத்து, “கண்ணே, தூங்கு, தூங்கு,” என்று சொன்னான். முத்துவின் தாய் தகப்பனருக்கு ஒன்றும் புரியவில்லை. சோமு ஆத்திரத்துடன் முத்துவைப் பார்த்து, “ஏனடா, நீ என் புத்தகத்தை எடுத்து இப்படிப் பாழாக்குகிறாய்? உனக்குப்

புத்தியில்லையா?" என்று கூறினன். முத்து நிதானமாக, "அண்ணு, எனக்குப் புத்தி இருக்கிறது. அதனால்தான் இப்படிச் செய்தேன். நீங்கள் இந்தப் புத்தகத்தைக் கையால் தொட்டாலே தூங்கிவிடுகிறீர்களே! ஆகையால் பூம்பாவையும் தூங்கிவிடுவாள் என்று இவ்வாறு

செய்தேன்," என்ருன். முத்துவின் பேச்சைக் கேட்ட அவன் பெற்ருேர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். சோமு வெட்கப்பட்டான்.

சோமுவுக்குப் புத்தி வந்தது. அன்றையிலிருந்து அவன் இலக்கணத்தில் மிகவும் ஊக்கம் செலுத்தினன். ஆசிரியர் கொடுக்கும் பயிற்சிகளைத் தவருமல் செய்து இலக்கணத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ருன். வகுப்பில் பாடம் நடக்கும்போது கவனிக்காததனுலேயே அவ

னுக்கு அப்பாடத்தில் வெறுப்பு ஏற்பட்டதே தவிர உண்மையில் இலக்கணப் பாடம் கடினமன்று என்பதை உணர்ந்து கொண்டான். எதையும் ஊக்கத்துடன் செய்தால் அக்காரியம் மிகவும் எளிதாக இருக்கும் என்னும் உண்மையை அறிந்தான்.

" இன்பம் இன்பம் இலக்கணமே
அன்பாய்க் கற்கின் அரைக்கணமே,"

என்றபடி அவன் அந்த நிகழ்ச்சியிலிருந்து இலக்கணத்தில் வல்லவனானன்.

பயிற்சி

பொருளறிக:

அரைக்கணம் திகைத்தல் பயிற்சி
உறக்கம் நித்திரை

கீழ்வரும் தொடர்மொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

உயிரும் மெய்யும், திடுக்கிட்டு, வெடுக்கென்று.

விடை கூறுக:

1. சோமுவுக்கு எப்படிப் புத்தி வந்தது?
2. பூம்பாவையைத் தூங்கவைக்க அவள் பெற்றோர்கள் செய்த செயல்கள் யாவை?
3. இப் பாடத்திலிருந்து தூக்கத்தைக் குறிக்கும் வேறு சொற்களை எடுத்து எழுதுக.
4. இக் கதையில் நீ காணும் நகைச்சுவைப் பகுதிகளைக் கூறுக.

இலக்கணப் பயிற்சி

1. பாலன் வந்தான். (இயல்பாக நிற்கும் பெயர்)
—முதல் வேற்றுமை

2. தச்சன் கோவிலைக் கட்டினான். (கோயில்+ஐ)
— இரண்டாம் வேற்றுமை

3. தக்கிளியால் நூல் நூற்றான். (தக்கிளி+ஆல்)
— மூன்றாம் வேற்றுமை

4. ஏழைக்குப் பணம் கொடுத்தான். (ஏழை+கு)
— நான்காம் வேற்றுமை

5. வீட்டின் நீங்கினான், (வீடு+இன்)
— ஐந்தாம் வேற்றுமை

6. கண்ணனது பலகை. (கண்ணன்+அது)
— ஆறாம் வேற்றுமை

7. மரத்தில் கிளி. (மரம்+இல்)
— ஏழாம் வேற்றுமை

8. மகனே வா! (அழைக்கும் பெயர்)
எட்டாம் வேற்றுமை

கீழ்வரும் பெயர்களை எட்டு வேற்றுமையிலும் அமைக்க:

கிளி, வண்டி, அரசன், நண்டு, சென்னை.

9. காய்கறித் தோட்டம் அமைத்தல்

மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்கள் மூன்று. அவை காற்று, உணவு, தண்ணீர் என்பன. அரிசி, கோதுமை, கேழ்வரகு முதலியவை. நம் நாட்டு மாந்தரின் முக்கியமான உணவுப் பொருள் களாகும். நாம் உண்ணும் உணவு பலவகைச் சத்துப் பொருள்களை உடையதாக இருக்கவேண்டும். அத் தகைய உணவே ஆரோக்கியத்துக்கு ஏற்ற உணவா கும். நாம் வெறும் அரிசியை மட்டும் சமைத்து உண்ப தில்லை. அத்துடன் பால், காய்கறி வகைகள், கீரை, பழங்கள் முதலியனவற்றையும் சேர்த்து உட்கொள்ளு கிறோம். காய்கறிகளை ஆகாரத்துடன் சேர்த்து உண்ப தால் நம் உடம்பு வலிமை பெறுவதுடன் நோய்கள் வராமல் காக்கவும் முடியும். உடம்பும் போதிய வளர்ச் சியை அடையும்.

நாம் உட்கொள்ளும் காய்கறி வகைகளை எப்படிப் பயிரிடுவது? கடையிலிருந்து பணம் கொடுத்துக் காய் களை வாங்கி உண்பதைவிட நாமே நம் வீட்டின் சுற்றுப் புறங்களில் காய்கறிச் செடிகள் நட்டுப் பயிராக்கி உண் பது நல்லதல்லவா? அதனால் நம் செல்வம் மிச்சமாவ துடன் அன்றன்றும் புதிய காய்கறிகளாகவும் பறித்து உண்ணலாம். நாம் நம் தேவைக்குப்போக மிகுந்த காய்கறிகளை விற்றுப் பணமும் சேர்க்கக் கூடும்.

காய்கறிச் செடிகளைப் பயிரிடுவதற்குமுன் பயிரிட வேண்டிய நிலத்தைப் பண்படுத்த வேண்டும். நிலத் தின் மண் களிமண்ணாக இருப்பின் தண்ணீர் தேங்கிச் செடிகளின் வேர்களை அழுகும்படிச் செய்யும்; மணலாக

இருப்பின் தண்ணீர் முழுவதும் செடிகளுக்கு எட்டா மல் தரையில் சுவறிவிடும். ஆகையால் மணலும் களி மண்ணும் கலந்த நிலமே காய்கறிச் செடிகளைப் பயிரிடு வதற்குத் தகுந்த இடமாகும். பயிரிடும் இடத்தைத் தேர்ந்தெடுத்த பிறகு அந்நிலத்தை நன்ருக உழுது பண்

படுத்திப் பாத்திகளாகப் பிரித்துக் கொள்வது நலம். மேலே படரும் கொடிவகைகளை ஒருபுறமும், செடிவகை களை ஒருபுறமும், கீரை வகைகளை மற்ருெரு புறமும், தரை யில் படரும் கொடி வகைகளை வேருெரு பக்கமுமாகப் பயிர் செய்ய வேண்டும். நாற்றுக்கள் பயிரிடுவதற்குத் தனிப் பாத்திகள் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நிலத்தைப் பண்படுத்திய பிறகு செடிகளுக்குத் தகுந்த எருக்களைக் கலக்கவேண்டும். எருவுக்கு உரம் என்று மற்ருெரு பெயருமுண்டு. செடிகளின் வளர்ச் சிக்கு எரு மிகவும் அவசியமாகும். மாட்டுச்சாணம், ஆடு, கோழி, பன்றி முதலியனவற்றின் கழிவுப்பொருள் கள் சிறந்த எருக்களாகும். தோட்டத்தின் ஒரு மூலை யில் எருக்குழி ஒன்றை அமைத்து இக்கழிவுப் பொருள்

களைச் சேர்த்து மக்கிப்போகும்படிச் செய்தால் நாளடைவில் அவை சிறந்த உரமாக மாறும். இவையேயன்றித் தழைகள், பிண்ணுக்கு, எலும்புத்தூள் போன்ற பொருள்களும் எருவைத் தயாரிக்க உதவுகின்றன.

கத்தரி, முள்ளங்கி போன்ற செடிவிதைகளை முதலில் ஒரு சிறு பாத்தியில் விதைத்து அவை ஏறக்குறைய இரண்டு அங்குலம் வளர்ந்தவுடன் அவற்றைப் பிடுங்கி வேறிடங்களில் நடுவார்கள். இதற்கு **நாற்று**

நடுதல் என்று பெயர். சிறிய நாற்றுக்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது மெதுவாகப் பாய்ச்ச வேண்டும். பூவாளி ஒன்றினுல் அவற்றின் மேலே மெதுவாக நீர் தெளிப்பது நல்லது. மாலை நேரமே செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சத் தகுந்த நேரமாகும். அவரை, புடல், பாகல் முதலிய கொடிகள் காற்றில் அலையாமல் தகுந்த கொழுகொம்புகளை நட்டு அவை படருவதற்கு ஏற்ற பந்தல்களை அமைப்பதுண்டு.

செடிகள் வளரும்போது அவற்றுடன் நமக்கு வேண்டாத குப்பைமேனி, காளான் போன்ற தாவரங் களும் வளரும். அவற்றை அடிக்கடி வேரோடு களைந்து அப்புறப்படுத்தவேண்டும்.அதற்குத்தான் **களையெடுத் தல்** என்று பெயர். களையெடுக்காத செடிகள் செழித்து வளரமாட்டா. மேலும் செடிகள் வளரவொட்டாமல் தடுக்கும் விரோதிகளான எலிகள், வெட்டுக்கிளிகள், வண்ணாத்திப் பூச்சிகள், கம்பளிப் பூச்சிகள் முதலியன தோட்டத்தில் சேராதபடி கவனிக்கவேண்டும். புகை யிலை, சோப்பு, மயில்துத்தம் முதலியவற்றின் கரைசல் களைச் செடிகளின்மேல் தெளிப்பதால் இவை வராத படி காக்கலாம். மேலும் ஆடு மாடுகள் தோட்டப் பயிர்களை நாசமாக்காதபடி உறுதியான வேலிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். வேலிகளை அடிக்கடி பழுது பார்க்கவும் வேண்டும்.

காய்கள் சமைப்பதற்கான முற்றிய பக்குவத்தை யடைந்து விட்டனவா என்பதை அறிந்து அவற்றைப் பறித்துப் பயன்படுத்திக்கொள்வது நலம். அவரை, வெண்டை, புடல் போன்ற காய்களை அதிகமாக முற்ற வைத்தல் கூடாது. தண்டுக்கீரையை இளைதாக இருக்கும்போதே பிடுங்கிச் சமைத்துக் கொள்ளலாம். அரைக்கீரைப் பாத்தியில் மாதம் இருமுறை அல்லது மும்முறை அரிவாளால் செடியின் மேல்பாகத்தை மட் டும் அறுத்துக் கொள்ளலாம். நம் தோட்டத்திலிருந்து நாம் பறிக்கும் காய்களை எடைபோட்டு நமக்குத் தேவை யானது போக எஞ்சியவற்றை விற்றுக் கணக்கு வைத் துக் கொள்ளுதல் சிறந்த முறையாகும். தோட்டக் குறிப்புப் புத்தகத்தில் செடியின் பெயர், விதைத்த நாள்,

முளைத்த நாள், காய்க்கத் தொடங்கிய நாள், பட்டுப் போன நாள் என்பன போன்ற விவரங்களைக் குறித்து வருவதால் ஒவ்வொரு செடியைப்பற்றிய தன்மைகளையும் நன்கு உணரலாகும்.

தோட்டப் பயிர்களில் பெரும்பாலானவை ஓராண்டுக்குமேல் நிலைப்பதில்லை. எனவே அடுத்த ஆண்டில் விதைப்பதற்கு வேண்டிய விதைகளை முன் ஆண்டுப் பயிர்களிலிருந்தே சேகரித்துக்கொள்ளுதல் நலமாகும். நாமே தயாரித்த முற்றின விதைகளைப் பயிரிடுவதுதான் நல்ல பலனைக் கொடுப்பதாகும். பிறரிடம் விதைகளை விலைக்கு வாங்கலாகாது. நாள்பட்ட விதைகள் சரியாக முளைத்துப் பயனளிப்பதில்லை. செடி கொடிகள் காய்க்கும்போது நல்ல வளமான காய்களை விதைக்கு விடல் வேண்டும். விதை நன்றாக முற்றி நெற்றானவுடன் அவற்றைப் பறித்து வெயிலில் உலர்த்திப் பூச்சிகள் அரித்துவிடாதபடி பத்திரப்படுத்திவைத்தல் வேண்டும். வித்தகளை அந்தந்தப் பருவங்களில் விதைக்கவேண்டும். 'பருவத்தே பயிர் செய்', 'ஆடிப் பட்டம் தேடி விதை', என்பன போன்ற பழமொழிகள் விதைகளைத் தகுந்த காலத்தில் விதைக்க வேண்டிய அவசியத்தைத் தெரிவிப்பனவாகும்.

உணவுப்பொருள் நமது தேவைக்குப் பற்றாமல் இருக்கும் இக்காலத்தில் நாம் ஆங்காங்கே காய்கறித் தோட்டங்களை அமைத்து நன்மை பெறவேண்டும். கிராமங்களில் காய்கறித் தோட்டங்கள் அமைப்பதற்குப் பரந்த நிலங்கள் உண்டு. சென்னை போன்ற நகரங்களில் வீட்டு நெருக்கடி அதிகமானதால் தோட்டங்கள் அமைப்பது சிறிது கடினமே. எனினும் அவரவர் தத்

தமக்குக் கிடைத்த நிலப் பகுதிகளில் காய்கறிச் செடிகளைப் பயிரிடுதல் வேண்டும். காய்கறித் தோட்டம் நாட்டின் நன்மைக்கு அவ்சியமென்று உணர்ந்து சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கவர்னர்-ஜெனரலாக இருந்தபோது தமது பெரிய நந்தவனத்தையும் காய்கறித் தோட்டமாக மாற்றினூர். சென்னைக் கவர்னரும் தமது மாளிகையின் சுற்றுப்புறத்தில் உள்ள நிலங்களில் உணவுப் பொருள்களைப் பயிரிட ஏற்பாடு செய்தார்.

உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்குவது நம் சுதந்திர அரசாங்கத்தாரின் முக்கியமான திட்டங்களில் ஒன்ருகும். நாம் காய்கறித் தோட்டங்களை அமைப்பதன் மூலம் அரசியலாருடன் ஒத்துழைத்து நலம் பலவும் அடைவோமாக.

பயிற்சி

பொருளறிக :

உரம்	சத்து	பருவம்
கரைசல்	சுவறி	பண்படுத்தல்
களைதல்	நாற்று	
கொழுகொம்பு	நெற்று	

விடை கூறுக :

1. மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதன யாவை?

2. ஆரோக்கிய உணவு என்பது யாது?

3. காய்கறிச் செடிகளைப் பயிரிடுவது எப்படி?

4. பூச்சிகள் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

5. விதைகளைச் சேகரிக்கும் முறைகளை விளக்குக.

6. காய்கறித் தோட்டம் அமைப்பதில் ராஜாஜீ செய்த அருஞ்செயல் யாது?

7. காய்கறித் தோட்டம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

இலக்கணப் பயிற்சி

இவற்றைப் படி:

தாய் தன் குழந்தையை எடுத்து முத்தமிட்டாள். கண்ணன் தான் கண்ட காட்சியைப்பற்றிக் கூறினான்.

எடுத்து முத்தமிட்டாள் கண்ட கூறினான்	இவை வினைச் சொற்கள்
முத்தமிட்டாள் கூறினான்	இவற்றின் பொருள் முடிந்துள்ளது. இவை முற்றுவினைகள் எனப்படும்.
எடுத்து கண்ட	இவற்றின் பொருள் முடியவில்லை. இவை எச்ச வினைகள் எனப்படும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள முற்றுவினைகளையும் எச்சவினைகளையும் தனித்தனியாக எழுதுக:

1. இந்த வீட்டைக் கட்டிய கொத்தன் யார்?
2. நீ நேற்று வாங்கிய புத்தகம் எங்கே?
3. சிறுவன் பந்து விளையாடப் பழகினான்.
4. நான் கற்பித்த பாடத்தை அவன் ஒப்பித்தான்.
5. அவன் மரத்தின்மேல் ஏறிப் பழம் பறித்தான்.

10. நான் சிறுவனாக இருந்தபோது

நான் பிறந்த ஊர் ஒரு சிறிய கிராமம். இராஜவல்லி புரம் என்பது அதன் பெயர். அது திருநெல்வேலியி லிருந்து ஆறு மைல் தொலைவில் இருக்கிறது. நான் படிக் கும் காலத்தில் அங்கே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடந் தான் உண்டு. அந்தப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்பு முடியப் படித்தேன்.

எங்கள் ஊரிலிருந்து நான்கு மைல் அளவில் பாளையங்கோட்டை என்ற ஒரு பெரிய ஊர் இருக்கி றது. அங்கே 'ஹைஸ்கூல்' என்னும் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு அந்நாளில் பேர் பெற்றவை. அவற்றுள் ஒன்று செயின்ட் சேவியர் உயர்நிலைப்பள்ளி. இப்போது அது பெரிய கல்லூரி (காலேஜ்) ஆக வளர்ந்து பெருகி யிருக்கிறது.

சேவியர் உயர்நிலைப் பள்ளியிலே ஐந்தாம் வகுப் பில் என்னைச் சேர்த்துக்கொண்டார்கள். அப்போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. என் பெற் றோர் அடைந்த பெரு மகிழ்ச்சியைச் சொல்ல முடியாது. பெரிய படிப்பிலே நான் சேர்ந்து விட்டதாக எண்ணி எண்ணி இன்பமுற்றார்கள்.

நான் படித்த பள்ளியிலே கட்டுப்பாடும் கண்டிப் பும் அதிகம். வாரந்தோறும் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனுடைய படிப்பைப் பற்றியும் நடத்தையைப் பற்றியும் தலைமையாசிரியருக்கு ஓர் அறிக்கை அனுப்பு வார்கள். என் காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர் ஒரு சாமியார். அவர் ஆறடி உயரமும் அழ கிய மேனியும் உடையவர். கழுத்திலிருந்து கால் வரை

வெண்மையான அங்கியும் இடையிலே செம்மையான கச்சையும் அணிந்தவர். ஒவ்வொரு வாரமும் தவருமல் திங்கட்கிழமை யன்று அவர் எங்களுக்குக் காட்சியளிப்பார்.

பிரம்பும் கையுமாக அவர் ஒவ்வொரு வகுப்பிலும் நுழையும்பொழுது பிள்ளைகளாகிய எங்கள் உள்ளம் பதறும். யாருக்கு அடிவிழுமோ என்று நினைக்கும்பொழுது அறிவே சிதறும். சாமியார் வகுப்பின் நடுவே நின்று கொண்டு வாராந்தர அறிக்கையை விரிப்பார்; வரி வரியாகப் படிப்பார்; மட்டம் என்றும், மோசம் என்றும் அறிக்கையில் ஆசிரியர்களால் குறிக்கப்பட்ட பிள்ளை

களின் கையில் தனித் தனியே எட்டு அடி கொடுப்பார். ஒருவன் அடிபடும் பொழுது எல்லோரும் நடுங்கு வோம்.

அடிமேல் அடி யடித்தால், அம்மியும் நகரும் அல்லவா? அந்த முறையில் அடிபட்ட பிள்ளைகளும் கருத்தாகப் படித்துக் கல்வியில் முன்னேற்றம் அடைந் தார்கள். "சேவியர் பள்ளியைச் சேர்ந்தால் களி மண் ணுக்கும் கல்வி வரும்." என்று அக்காலத்திலே சொல்வ துண்டு.

ஐந்தாம் வகுப்பில் அடிவைத்த நான் படிப் படி யாகத் தேறி ஏழாம் வகுப்பையும் முடித்தேன். அந்த ஆண்டுப் பரீட்சையில் தேறிய மாணவர்களுள் முதல் இடம் பெற்றதற்காக எனக்கு ஒரு புத்தகம் பரிசளித் தார்கள். வாரந்தோறும் கடுமையான முகத்தோடு காட்சி யளித்த தலைமையாசிரியர் மலர்ந்த முகத்தோடு அன்று பரிசளித்த கோலம் இன்றும் என் கண்ணை விட்டு அகலவில்லை.

பரிசு பெற்ற புத்தகத்தைக் கொண்டு போய்ப் பெற்றோரிடம் காட்டினேன். அவர்கள் இன்பவாரியில் மூழ்கினார்கள். அப்போது கோடைவிடுமுறைக் காலம் வந்தது. இரண்டு மாதம் நன்றாக விளையாடலாம் என் றெண்ணிச் சொந்த ஊருக்குச் சென்றேன்.

எங்கள் ஊரிலே ஒரு சைவச் சாமியார் இருந்தார். இவருக்கும் பள்ளிக்கூடத்துச் சாமியாருக்கும் எவ் வளவோ வித்தியாசம். கடுமையான முகத்தை இவ ரிடம் யாரும் கண்டதில்லை, காவி உடையும், கண்டி கையும் அணிந்தவர்; எவரிடத்தும் அன்பாய் இருப்ப வர்; கல்விக் கடலைக் கடந்தவர் என்று பெரியோர்

சொல்லுவர். சிவன் கோயிலுக்கு அருகே இருந்த சிறு மடந்தான் அவர் இருப்பிடம்.

விடுமுறைக்காக ஊருக்குச் சென்றதும் என் தந்தையார் நான் கற்ற கல்வியையும் அதற்காகப் பெற்ற பரிசையும் சாமியாரிடம் காட்ட ஆசைப்பட்டார். பரிசைப் பிறரிடம் காட்டுவதில் எனக்கும் ஆசைதானே? புத்தகமும் கையுமாகச் சாமியாருடைய மடத்திற்குச் சென்றேன்; அவர் முன்னே புத்தகத்தை வைத்து வணங்கினேன். அது நான் பெற்ற பரிசு என்று என் தந்தையார் பெருமையோடு பேசினர்.

புத்தகத்தைக் கையில் எடுத்தார் சாமியார். அவர் முகம் மலர்ந்தது. என்னைப் பார்த்து, "நீ நல்ல பையன்; அருமையான தமிழ்ப் புத்தகம் உனக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது. 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறாய் அல்லவா? நாலு என்பது நாலடியார்; இரண்டு என்பது திருக்குறள். இந்தத் திருக்குறளுக்கு இணையான நூல் ஒன்றுமில்லை. இப்பொழுதே நீ இதைப் படிக்கத் தொடங்கவேண்டும்" என்றார்.

அது கேட்ட என் தந்தை, "அப்படியானல் ஒரு நல்ல நாள் பார்த்துச் சுவாமியே அதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்." என்று வேண்டிக் கொண்டார்.

"நாளை வியாழக்கிழமை-குருவாரம்-நல்ல நாள். நாளையே தொடங்கி விடுவோம்," என்று திருநீறு பூசி எங்களுக்கு விடைகொடுத்தார் சாமியார்.

திரும்பி வீட்டுக்கு வரும்பொழுது எனக்கு உற்சாக மில்லை. "விடுமுறைக் காலத்தில் நன்றாக விளை

யாடலாம் என்றல்லவோ இங்கு வந்தேன்? விளையாட்டுத் தோழர்களோடு சேர்ந்து குதித்துக் கொட்டம் அடிக்க வொட்டாது சாமியார் குறுக்கிட்டாரே! பள்ளிக்கூடத்தில் 'படி, படி' என்று ஒரு சாமியார் சொல்வது போதாதா? இங்கும் ஒரு சாமியார் இருந்து கொண்டு 'படி, படி' என்கிருரே! பரிசு பெற்ற புத்தகம் அல்லவோ இத்தனைக்கும் காரணம்?" என்று கவலை கொண்டேன்.

என் மனத்திலே குடிகொண்ட கவலையை என் தந்தையார் அறியவில்லை. மறுநாள் சாமியார் மடத்திற்கு என்னை அழைத்துச் சென்ருர். சாமியார் கருணையோடு என்னைத் தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு திருக்குறள் கற்கும் முறையை எடுத்துரைத்தார்.

"இந்தப் புத்தகத்தில் அடங்கிய திருக்குறள் முழுவதையும் நீ மனப்பாடமாக்கிக்கொள்ள வேண்டும். நாள்தோறும் ஐந்து குறள் பாடமாக்கிஞல் போதும். இளமைதான் இந் நூலைக் கற்பதற்கு ஏற்ற காலம். ஒவ்வொரு குறளின் கருத்தையும் நான் சொல்லித் தருவேன். இப்போது புத்தகத்தில் உள்ள உரையை நீ படிக்க வேண்டாம். கருத்தை மட்டும் தெரிந்து கொண்டால் போதும்," என்று சொல்லித் திருக்குறள் பாடத்தைத் தொடங்கி விட்டார்.

நான் சித்திரப்பாவை போல் சாமியார் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். பாடம் முடிந்தது; வீடு சென்றேன்.

"முதல் ஐந்து குறளையும் மனப்பாடம் செய்து தொலைக்க வேண்டுமே; நாளைக்குச் சாமியார் கேட்பாரே," என்று ஒரு மூலையில் இருந்து உருப் போடத்

தொடங்கினேன். ஒவ்வொரு குறளையும் படிக்கும் பொழுது வேப்பங் காயைக் கடிப்பதுபோல் இருந்தது எப்படியோ ஐந்து குறளைப்—பத்து வரியையும்—படித்து மறுநாள் சாமியாரிடம் ஒப்பித்தேன். அவர் என்னை ஊக்கப்படுத்தினார். " ஒரு வாரத்திற்குச் சிறிது துன்பமாக இருக்கும். அப்பால் மனப்பாடம் செய்வது பழக்கமாகி விடும் " என்றார்.

அந்த ஆண்டு விடுமுறை எனக்குத் தொல்லையாகத் தோன்றியது. நாள்தோறும் தவறாது மனப்பாடம் செய்து சாமியாரிடம் குறளை ஒப்பித்தேன். இருநூற்றைம்பது குறட்பாக்கள் முடிந்தன. பாளையங்கோட்டையில் பள்ளிக்கூடம் திறந்தது.

அந்த விடுமுறையை எந்த நாளும் நான் மறவேன். தொல்லை விளைப்பதுபோல் தோன்றி எல்லையற்ற இன்பம் விளைத்தது அந்த விடுமுறை. ' தொடங்குங்கால் துன்பமாய் பின்னர் இன்பம் பயக்கும் நூல் திருக்குறள்' என்பதில் என்ன தடை? நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

— உயர்திரு ரா. பி. சேதுப் பிள்ளை

பயிற்சி

பொருளறிக :

அங்கி	கொட்டம்	தொல்லை
இணையான	கோலம்	பயக்கும்
இன்பவாரி	சித்திரப்பாவை	வையகம்
எல்லையற்ற		

உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பேர் பெற்ற, அளவில்லை, கட்டுப்பாடு, வாரந்தோறும், எண்ணி எண்ணி, வரிவரியாக, தனித்தனியே, கடுமையான, புத்தகமும் கையுமாய், குறுக்கிட்டு, குடிகொண்ட, எல்லையற்ற.

விடை கூறுக:

1. சேவியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தவுடன் ஆசிரியர் மகிழ்ச்சி யடையக் காரணம் என்ன?

2. சேவியர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக இருந்த சாமியார் எப்படிப்பட்டவர்?

3. 'சேவியர் பள்ளியைச் சேர்ந்தால் களிமண்ணுக்கும் கல்வி வரும்' என்று ஆசிரியர் கூறக் காரணம் என்ன?

4. 'நாலும் இரண்டு சொல்லுக் குறுதி'—இதன் பொருளை நன்கு விளக்குக.

5. பரிசுப் புத்தகம் எவ்வாறு தொல்லை விளைத்தது; அஃது எப்படி இன்பம் அளித்தது?

இலக்கணப் பயிற்சி

மணி + அடித்தது = மணியடித்தது.
தீ + அணைந்தது = தீயணைந்தது.
பனை + ஓலை = பனையோலை.

நிலைமொழி ஈற்றில் இ, ஈ ஐ என்னும் உயிர் எழுத்துக்கள் இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வரின் யகர உடம்படுமெய் தோன்றும்.

சே + அடி = சேயடி
சே + அடி = சேவடி
தே + ஆரம் = தேவாரம்

எ என்னும் உயிரெழுத்தை ஈற்றில் உள்ள நிலைமொழி உயிர் எழுத்தை முதலில் உடைய வருமொழியோடு சேரும் போது ய், வ் என்னும் மெய்களுள் ஏதேனுமொன்று பெற்று வரும்.

சேர்த்து எழுதுக:

கனி + அளித்தான், மாலை + அணிந்தாள், விளா + அழகு, தீ + எரிகின்றது, கோ + இல், ஆடை + எடுத்தான்.

வாழை + பழம் = வாழைப்பழம்
படிக்க + சென்றான் = படிக்கச் சென்றான்
மற்றை + சாதி = மற்றைச் சாதி
ஈ + கால் = ஈக்கால்

நிலை மொழியின் ஈற்றில் உள்ள உயிர் எழுத்துக்களுக்கு முன் க, ச, த, ப என்னும் எழுத்துக்கள் வந்தால் வந்த எழுத்து பெரும்பாலும் மிகும்.

வேல் + அழகு = வேலழகு
பால் + ஏடு = பாலேடு

மெய்யெழுத்துக்கு முன் உயிர் எழுத்து வந்தால் அவ்வுயிர், மெய்யெழுத்தின் மேல் ஏறும்.

சேர்த்து எழுதுக :

வான் + ஏடு, நூல் + அறிவு, கால் + ஒடிந்தது, பால் + ஆவி.

11. இளங்கோவடிகள்

[சேரநாட்டு மன்னன் நெடுஞ்சேரலாதன் தன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கிறான். அவன் மூத்தமகன் செங்குட்டுவனும் இளையமகன் இளங்கோவும் இருபுறமும் இருக்கின்றனர்.]

(சோதிடன் ஒருவன் அரண்மனைக் கொலுமண்டபத்துக்கு வருகிறான்.)

சோதிடன்: காவல, நான் உங்கள் மன்னரைக் காணவேண்டும்.

காவலன்: அரசர் அனுமதியின்றி யாரும் உள்ளே நுழையக்கூடாது. நீர் யார் என்பதை முதலில் கூறும்.

சோதிடன்: காவல, நான் முக்காலமும் அறிந்து உரைக்க வல்ல சோதிடன். என் நாடு சோழநாடு.

காவலன்: சரி, இங்கேயே இரும். மன்னன் அனுமதி பெற்று உள்ளே செல்லலாம்.

(காவலன் போகிறான்.)

காவலன்: வஞ்சி வேந்தே! வாழி! வணக்கம். யாரோ சோழநாட்டுச் சோதிடராம். தங்களைக் காண வேண்டுமென்று அரண்மனை வாயிலில் காத்திருக்கிறார்.

மன்னன்: சோதிடரா? அவரை உள்ளே வரவிடு.

(காவலன் சோதிடனை உள்ளே அனுப்புகிறான்.

சோதிடன்: சேரர் பெரும, வாழி நின் கொற்றம். வணக்கம்.

மன்னன் : வருக சோதிடரே, உட்காரும். சோழ நாட்டினின்றும் ஈண்டுத் தாங்கள் போந்த காரணம் என்ன ? சோழனும் தேவியும் மக்களும் நலந்தானு ?

சோதிடன் : மன்னர் மன்ன, யாவரும் நலமே. தாங்கள் வீராதிவீரர். இமயம் வரையில் படையெடுத்து வெற்றி பெற்ற தங்கள் அரிய புகழ் நாட்டின் மூலே முடுக்குகளெல்லாம் பரவியுள்ளது. தங்களைத் தரிசித்து விட்டுப் போகலாமென்றே இங்கு வந்தேன்.

மன்னன் : நன்று சோதிடரே, நும் வரவு நல் வரவாகுக.

சோதிடன் : (பக்கத்திலிருக்கும் குமாரர்களைக் காட்டி) வெற்றி வேந்தே, இவர்கள்தாம் தங்கள் மைந்தர் களோ ?

மன்னன் : ஆம். இவன் என் மூத்தமகன். இவன் பெயர் செங்குட்டுவன். இவன் என் இளையமகன். இவன் பெயர் இளங்கோ. இவர்கள் எதிர்காலம் பற்றி நீவிர் ஏதேனும் கூறவல்லீரோ ?

சோதிடன் : (இரு பிள்ளைகளின் முகத்தையும் உற்றுக் கவனித்தல்) அரசரேறே, நான் சொல்வதைக் கேட்டுத் தாங்கள் கோபிக்கமாட்டீர்களே ?

மன்னன் : சோதிடரே, உள்ளதை உள்ளவாறே தாராளமாகக் கூறுங்கள். நான் தங்களைக் கோபித்தலால் ஆவது என்ன ?

சோதிடன் : அரசே, இவ்விரு புதல்வர்களின் முகக் குறிப்பையும் ஆராயின், இளைய புதல்வரே உமக் குப் பின் பட்டத்துக்கு உரியவராவர் என்று தோன்று கிறது. அவரே எதிர்காலத்தில் பெரும் புகழும் நல் வாழ்வும் • உடையவராவார். செங்குட்டுவன் பட்டத்

துக்கு உரியவராகத் தக்க குறிப்பு ஒன்றுமே தோன்றவில்லை. இதுவே என் சோதிடக் குறிப்பு.

(செங்குட்டுவன் திடுக்கிட்டு முகம் வாட்டமுறுகிறான்; வருத்தத்துடன் தலை குனிகிறான்.)

மன்னன் : செல்வ மைந்த, செங்குட்டுவ, வருத்தப்படாதே.

இளங்கோ : (கோபத்துடன் எழுந்து சோதிடரைப் பார்த்து) சோதிடரே! நன்று உமது பேச்சு! அண்ணன் இருக்கத் தம்பி நாட்டை ஆள்வதா? அஃது ஒரு போதும் இயலாத காரியம்! என் மூத்த சகோதரன் ஆளாமல் நான் முடிபுனைந்து ஆள்வேன் என்று எண்ணிவிட்டீர்?

சோதிடன் : அறிவாற்றல்களிற் சிறந்த இளவரசே, நான் என்ன செய்வேன்? என் சோதிடத்தில் கண்ட உண்மையைத் தானே நான் கூறினேன்?

இளங்கோ : பெரிய உண்மையைக் கண்டுவிட்டீர்? நீரும் பெரும் பொய்காரர். நீர் கூறிய குறிப்பும் பொய்தான். அது வெறும் கட்டுக் கதைதான்.

சோதிடன் : இளவரசே, நான் கூறுவதா கட்டுக் கதை?

மன்னன் : என்ன.......? மூத்தவன் இருக்க இளையவனுக்கா பட்டம்?

சோதிடன் : மன்னர் மன்ன! நான் சொல்லவில்லையே! சோதிடம் சொல்லும் எதிர்காலப் பலன் இது.

இளங்கோ : (கோபத்துடன்) போதும், சோதிடரே! நிறுத்தும் உம் குறிப்பை! இது புலவர்களும்

மன்னர்களும் நிறைந்த சபை என்பது நினைவில் இருக்கட்டும்.

மன்னன் : இளங்கோ, பொறு. சோதிடரை முனிவதில் என்ன பயன்? கலைஞரை அவமதிக்கக் கூடாது. சோதிடரே! தங்கள் சோதிடத்தின்படி என் மூத்தமகன் செங்குட்டுவன் அரசாளும் வலிமையற்றவன் என்பது தங்கள் கொள்கையோ?

இளங்கோ : பேரரசர்களை யெல்லாம் வென்று வெற்றிக்கொடி நாட்டிய என் அண்ணனுக்கா அரசாளும் ஆற்றல் இல்லை என்று எண்ணிவிட்டீர்?

சோதிடன் : சோதிடம் கூறும் குறிப்பு அப்படி இருக்கும்போது தாங்கள் இப்படி என்மீது கோபிக்கலாகுமா?

மன்னன் : (சிறிது யோசித்து) சோதிடரே, இதுவே உண்மையானாலும் என் மக்கள் ஒருவர்மீது மற்றொருவர் பொறாமை கொள்ளமாட்டார். இருவரும் ஒரு மனப்பட்டு ஒற்றுமையாகவே என்றும் வாழ்வர்.

இளங்கோ : (ஆத்திரத்துடன்) அப்பா! என்ன சொன்னீர்கள்! இச்சோதிடன் பேச்சைக் கேட்டு நான் என் அண்ணனைத் தள்ளிவிட்டு அரியாசனத்தில் ஏறுவேன் என்று நினைத்துவிட்டீர்களா?

மன்னன் : என் அருமைச் செல்வ! இளங்கோ! ஆத்திரம் வேண்டாம். நம் சேரர் குலம் சிறப்படைய வேண்டுமானால் நீ எதற்கும் சித்தமாக இருக்க வேண்டும். உன் கடமையைச் செய்யத் தவறக் கூடாது. வருங்காலப் பலனை உரைப்பதில் வல்லவராகிய சோதிடரை இகழ வேண்டாம்.

இளங்கோ: தந்தையே! இவன் மிகவும் பொய்யன். வாயில் வந்ததை உளறினான். வருங்காலப் பயனை இவனா உணர்த்த வல்லவன்?

மன்னன்: இளங்கோ! கோபத்தால் குணங் கெட்டுப் பேசுதல் உன்னைப்போன்ற இளைஞர்களுக்கு அழகன்று.

இளங்கோ: தந்தையே, தங்களுக்கு இந்தச் சோதிடன் பெரிய அறிஞனாகக் காணப்படலாம். இவன் சோதிடமே என் விதியானால் அவ் விதியையும் என்மதியால் வெல்லுவேன். என் அண்ணனுக்கு இழுக்குத் தேடி நானோ அரியாசனம் ஏறுவேன்? இதற்கு ஒரு பொழுதும் உடன்படேன்! இந்த உலகமே தலைகீழாக மாறினாலும் உடன்படேன்! இது சத்தியம்.

மன்னன்: குழந்தாய்! இப்படியா சபதம் செய்வது!

இளங்கோ: ஆம்! இந்த அரியாசனத்துக்கு நான் மட்டுமன்று. என் பின்னோரும் உரியவராகார் என்பதற்காக நான் திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை. எனக்குப் பட்டமும் வேண்டாம்: பதவியும் வேண்டாம். எனக்கு எதற்கு இந்த ஆடம்பரமான ஆபரணங்களும் ஆடைகளும்?

(இளங்கோ தன் அணிமணிகளைக் கழற்றிக் கீழே எறிகிறான்.)

செங்குட்டுவன்: தம்பி, இளங்கோ! இஃது என்ன கோலம்!

இளங்கோ: அண்ணலே, இன்று முதல் நான் ஆண்டி! மன்னன் மகன் அல்லன்.

செங்குட்டுவன் : தம்பி, எனக்காகவா நீ அரச இன்பங்களை இழப்பது? அணிமணிகளைக் கழற்றி எறிகிறாயே! நம்மில் நாட்டை யார் ஆண்டால் என்ன?

இளங்கோ : அண்ணா, தயவு செய்து என்னைத் தடுக்கவேண்டாம். அண்ணன் இருக்கத் தம்பிக்கா அரியாசனம்? இது தகுமா? முறையா?

செங்குட்டுவன் : இளங்கோ, இதற்காகவா நீ துறவறம் கொள்வது? நாம் இருவரும் உடலால் வேறு பட்டாலும் உள்ளத்தால் ஒருவரன்றோ? இதற்காக அரண்மனையை விட்டுச் செல்வது நலமாகுமா?

இளங்கோ: வெற்றியும் வீரமும் சிறந்த என் அருமை அண்ணன் தங்களுக்கா நான் இழுக்கைத் தேடுவேன்? மூத்தவன் இருக்க இளையவன் அரசாள் வது தமிழர் மரபன்று. தாங்களே இந்நாட்டை ஆள வேண்டும். என் தாய்நாட்டின் மீது ஆணையாகச் சொல்லுகிறேன். எனக்கு இந்த அரசு வேண்டாம்.

மன்னன்: இளங்கோ! எவ்வளவு கொடுமை யான உறுதியை மேற்கொள்கிருய் என்று யோசித்துப் பார்.

இளங்கோ: தந்தையே, நமது சேரர் குலப் பெருமையைக் காப்பாற்றுவதற்காக நான் எத்தகைய கொடுமையையும் ஏற்கச் சித்தமாய் இருக்கிறேன். துறவு நெறியினின்று இனி ஒரு சிறிதும் பிறழேன். இன்றே குணவாயிற் கோட்டம் சென்று அறநெறி யின்று உலக மக்கட்குப் பணிபுரிவேன்.

செங்குட்டுவன்: அந்தோ! தம்பி, உன்னைவிட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன்! நீ என்னை என்றும் பிரியலாகாது. நான் பதவி ஏற்பின் அரசியற் காரியங் களில் எனக்குத் தக்க ஆலோசனை கூற நின்னையன்றி வேறு யார் இருக்கிருர்கள்? நீ என்னை விட்டுப் பிரியா மல் அரண்மனையிலேயே இருக்கவேண்டும்.

இளங்கோ: அண்ணலே, தங்கள் ஆணைப் படியே நடப்பேன். தங்கள் உடன் உறையும் நேரம் தவிர மற்றக் காலங்களில் குணவாயிற் கோட்டத்திருந்து அறப்பணி ஆற்றிவருவேன்.

மன்னன்: வாழ்க என் அருமைச் செல்வர்காள்! உங்கள் இருவரின் கூட்டுறவுதான் சேரர் பரம்பரை யின் சிறப்பினை வளர்க்கும்.

சபையினர் எல்லோரும்: வாழ்க இளங்கோ அடிகள்! இளமையில் துறவுபூண்ட ஏந்தல் வாழ்க! வாழ்க!

பயிற்சி

பொருளறிக:

அமர்ந்து	ஏந்தல்	கோட்டம்
அரியணை	ஏறு	போந்து
அறநெறி	கூற்று	வஞ்சி

கீழ்வரும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

மூலை முடுக்கு, அறிவாற்றல், தலைகீழாக, அணி மணிகள்.

விடை கூறுக:

1. சேரலாதன் மக்களைப்பற்றிச் சோதிடன் கூறிய குறிப்பு யாது?
2. இளங்கோ சோதிடனைக் கோபிக்கக் காரணம் என்ன?
3. அண்ணனுக்காக இளங்கோ செய்த தியாகம் யாது?
4. செங்குட்டுவன் இளங்கோவிடம் என்ன வேண்டினான்?
5. இளங்கோவடிகளுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

இலக்கணப் பயிற்சி

கீழ்வருவனவற்றைப் படி:

மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம்.

ணகர மெய்யும், னகர மெய்யும் க, ச, த, ப க்கள் வந்தால் பெரும்பாலும் முறையே டகற றகர மெய்களாகத் திரியும்.

கல்+சிலை = கற்சிலை

வாள்+படை = வாட்படை

லகர வகர மெய்களின்முன் க, ச, த, ப க்கள் வந்தால் பெரும்பாலும் முறையே றகர டகர மெய்களாகத் திரியும்.

கீழ்வருவனவற்றைப் பிரித்து எழுதுக :

பொற்பதக்கம், சொற்போர், மட்பாண்டம், தோட்காப்பு, கற்கோயில்.

கீழ்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக :

நாள்+குறிப்பு, வேல்+போர், கண்+செவி, தன்+பெருமை.

அருஞ்சொல் அகராதி

அங்கி - சட்டை
அசட்டை - பொருட்படுத்தாமை
அணிகள் - ஆபரணங்கள்
அமரகவி - தெய்வத்தன்மை உடைய கவிஞர்
அமர்ந்து - வீற்றிருந்து
அரசரேறு - அரசர்களில் சிறந்தவன்
அரைக் கணம் - நொடிப் பொழுது
அவதரித்தல் - தோன்றுதல்
அவம் - வீண்
அவா - விருப்பம்
அவைக்களம் - சபை
அறநெறி - நல்ல வழி
அனுட்டித்தல் - கையாளுதல்
அன்புநெறி - அன்புவழி
அன்னார் - அவர், அப்படிப் பட்டவர்
ஆணை - கட்டளை
ஆதிக்கம் - ஆட்சி, உரிமை
இடையூறு - துன்பம்
இணங்கி - இசைந்து
இணை - ஒப்பு, சமம்
இறுதி - முடிவு
இன்பவாரி - மகிழ்ச்சியாகிய கடல்
உரம் - எரு.
ஊர்தல் - தவழ்ந்துசெல்லல்
உறக்கம் - தூக்கம்
உறுதி - நிச்சயம்
உறையும் - வசிக்கும்
எழில் - அழகு
ஏது - காரணம்
ஏந்தல் - தலைவன்
ஏறு - தலைவன், காளை போன்றவன்
ஐயம் - சந்தேகம்
ஒத்தாசை - உதவி
ஒற்றர் - துப்பறிவோர்
கசடற - குற்றமற
கசந்தது - வெறுத்தது
கரைசல் - ஏதேனுமொரு பொருள் கரைக்கப்பட்ட திரவம்
களிப்பு - மகிழ்ச்சி
காட்சி - தோற்றம்
கீதம் - இசை
குடம் - மேற்கு
குணம் - கிழக்கு
குணவாயில் கோட்டம் - இது வஞ்சி நகரத்தின் கீழ்த் திசையிலிருந்த ஓர் ஊர். அவ்வூரில் தான் இளங்கோவடிகள் துறவு பூண்டிருந்தார்.
குழவி - குழந்தை
கூற்று - சொல், பதில்
கொழுகொம்பு - கொடி படர்தற்குரிய கொம்பு

கொட்டம் - வீண் விளையாட்டு
கோட்டம் - கோயில்
சத்து - சாரம்
சால - மிகவும்
சித்திரப் பாவை - சித்திரத்தில் உள்ள பொம்மை
சீரிய - பெருமை பொருந்திய
சுரத்தல் - கசிதல்
தளராத - சளைக்காத
திகைத்தல் - பிரமித்தல், திடுக்கிடுதல்
திக்கு - திசை
திங்கள் - மாதம்
திண்மை - வலிமை
தியாகி - தந்நலம் மறந்து பிறர் நலத்துக்குப் பாடுபடுபவர்
திரட்டும் - சேர்க்கும்
திருவற்ற - நன்மையில்லாத
தீர்ப்பு - முடிவு
தேசாபிமானம் - நாட்டுப் பற்று
தொல்லை - துன்பம்
நடுநிலையாளர் - நீதிபதி
நாட்டம் - எண்ணம்
நித்திரை - உறக்கம்
நில நூல் பூகோளம்
நீதிக்கலை - சட்டக் கல்வி
நுண்ணறிவு - கூர்மையான அறிவு
நெற்று - முற்றிய காய்
பங்கம் - அழிவு
பட்சபாதம் - ஒரு பக்கமாகப் பேசுதல்
பணியாற்றி - சேவை புரிந்து
பண்படுத்தல் - பக்குவப் படுத்தல்
பயக்கும் - கொடுக்கும்
பயிற்சி - அனுபவம்
பரம்பரை - தலைமுறை
பருவம் - பொழுது
பிரசாரம் - விளம்பரம்
புரட்சிக் கவி - புதிய கருத்துக்களைக் கொண்ட கவிஞ
புலரும் - விடியும்
புனைந்து - கற்பனை செய்து
பூதவுடல் - ஊன் உடல்
போந்து - சென்று
மாண்பு - சிறப்பு
மாரிக்காலம் - மழைக்காலம்
மாலுமி-கப்பலோட்டுபவன்
முடைதல் - வளைத்துக் கட்டுதல்
முட்டுப்பாடு - இல்லாமை
மூப்பு - வயதுமுதிர்ச்சி
வஞ்சி - சேரர் தலைநகர்
வழக்கு - மாறுபாடு
வழக்கறிஞர் - நியாயவாதி
வாணிபம் - வியாபாரம்
வியப்பு - ஆச்சரியம்
வேட்கை - விருப்பம்
வையகம் - உலகம்